
ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

அக்டோபர் - 1981

ஐப்பசி



திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

ஸ்ரீவேங்கடேசப் பெருமாள் ஊஞ்சல் சேவை

ஸ்ரீவேங்கடேசப் பெருமாள் எல்லாக் குணங்களையும் அவஸ்தைகளையும் கடந்து விளங்குகிறார். அவர் அவற்றால் பாதிக்கப்படவில்லை; அவைகள் அவரைப் பாதிக்கவும் முடியாது. ஆனால், பக்தர்கள் அந்த ஒப்பற்ற பரம்பொருளைத் தங்கள் உள்ளத்திலேயே உணர்ந்து அனுபவிக்கிறார்கள். ஆகையால் பக்தர்கள், ஸ்ரீவேங்கடேசப் பெருமாள் எப்போதும் உற்சாகமாகவும் சந்தோஷமாகவும் கவலையற்றும் இருந்து, தங்களுக்கு எல்லா விதமான சௌகரியங்களையும் சௌபாக்கியங்களையும் க்ஷேமங்களையும் கொடுத்துக்கொண்டிருக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள்.

இதுதான் திருமலையில் கண்ணாடி ஹால் எனப்படும் அயன மஹாலில் நாள்தோறும் நடத்தப்படும் ஊஞ்சல் சேவையின் தாத்பரியமாகும். இந்தச் சேவை ஒவ்வொரு நாளும் மாலையில் ஆறு மணிக்குப் பிறகு நடந்து வருகிறது. உற்சவமூர்த்தி அழகாக அலங்கரிக்கப்பெற்ற ஊஞ்சலில் தம் தேவிமார்களுடன் எழுந்தருளுகிறார். சந்தம், சாமர உபசாரங்கள், வேதபாராயணம், பஜனை ஆகியவற்றுடன் ஸ்வாமி லேசாக ஊஞ்சல் ஆடுகிறார்.

மேற்கண்ட ஊஞ்சல் சேவை உற்சவத்தில் பங்குகொள்ள விரும்பும் கிருகஸ்தர்கள் ரூ. 1000 செலுத்தித் தங்கள் குடும்பத்தில் ஆறு பேர்களுடன் இந்த உற்சவத்தில் கலந்துகொள்ளலாம். அவ்விதம் உற்சவத்தில் பங்குகொள்ளும் கிருகஸ்தருக்கு ரூ. 250 பெறுமானமுள்ள தங்க டாலரும் வஸ்திர வெகுமதியும் அளிக்கப்படும்.

எக்ஸிக்யுட்டிவ் ஆபீசர்,

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

தொகுதி 61 அக்டோபர் — 1981 இதழ் 10

பொருளடக்கம்

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமன் இல்லை.

—திருமூலர்

தொகுதி 61	துர்மதி ஷு ஐப்பசி மீ	இதழ் 10

பிரார்த்தனை

पातय वा पाताले स्थापय वा सकलभुवनसाम्राज्ये ।
मातस्तव पदयुगलं नाहं मुञ्चामि नैव मुञ्चामि ॥

— अम्बा-नवमणिमाला

பாதய வா பாதாளே ஸ்தாபய வா ஸகலபுவன-ஸாம்ராஜ்யே ।
மாதஸ் தவ பதயுகளம் நாஹம் முஞ்சாமி ॥

—காளிதாசன்

என் தாயே, மகாதேவி, என்னைப் பாதாளத்தில் தள்ளினாலும், சகல புவனங்களுக்கும் சக்கரவர்த்தியாக உயர்த்தினாலும். உன் இரண்டு பாதகமலங்களையும் எக்காலத்திலும் விடமாட்டேன், விடவே மாட்டேன்.

பத்தனாய்ப் பாடேன்; சுத்தனாய் ஒழுகேன்;
பகலெல்லாம் பாவமே பழகி
எத்தனாய்க் கழித்தேன்; இன்றுளேன் நாளை
இலனென எண்ணவும் படுவேன்
பித்தனேற் குனது பேரருள் அல்லால்
பிழைக்கு மாறில்லை யாதலினால்
அத்தனே! அடியேன் நின் சரண் அடைந்தேன்
அஞ்சலென் றடைக்கலம் அருளே.

— கிருஷ்ண பிள்ளை



ஸ்ரீ ராமகிருஷ்ணரின் அருள்வாக்கு

வெள்ளிக்கிழமை, டிசம்பர் 14, 1883

ஸ்ரீராமகிருஷ்ணர் : ஓர் அந்தணன் தனது குல தெய்வத்தை அன்ன நைவேத்தியத்துடன் நித்திய பூஜை செய்து வழிபட்டு வந்தான்.

ஒரு நாள் அவன் ஏதோ காரியமாக வெளி யூருக்குச் செல்ல வேண்டியிருந்தது. ஆகவே அவன் வீட்டை விட்டுப் புறப்பட்டபோது தன் சிறிய பையனிடம், "இன்றைய தினம் நீ நமது குலதெய்வத்திற்கு நைவேத்தியம் செய். பகவானுக்கு அமுது படைப்பதில் கவனமாக இரு" என்று சொல்லிவிட்டுச் சென்ருன்.

பையன் நண்பகல் நேரத்தில் தந்தை கூறிய படியே பூஜையறையில் சுவாமி விக்கிரகத்தின் முன்னல் நைவேத்தியம் படைத்தான். ஆனல் அந்தத் தெய்வமோ, இருந்த இடத்தை விட்டு அசையவுமில்லை, வாய் திறந்து அவனேடு பேச வுமில்லை, படைக்கப்பட்ட உணவை உட் கொள்ளவுமில்லை.

சிறுவன், 'சுவாமி தமது பீடத்திலிருந்து எழுந்து வந்து சாப்பிடுவார்' என்று நினைத்து அங்கேயே நீண்ட நேரம் உட்கார்ந்து காத்துக் கொண்டிருந்தான். ஆனல், நேரம்தான் ஆயிற்றே தவிர, சுவாமி என்னவோ தமது பீடத்திலிருந்து எழுந்திருக்கவே இல்லை.

சிறுவனே தெய்வம் நிச்சயமாகப் பீடத் திலிருந்து கீழே இறங்கி வந்து ஆசனத்தில் அமர்ந்துகொண்டு அன்ன நைவேத்தியத்தை உட்கொள்ளும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையுடன் இருந்தான்.

ஆகவே அவன் சுவாமி விக்கிரகத்தைப் பார்த்து, "சுவாமி, கீழே இறங்கி வந்து உட் கார்ந்து அன்னத்தைச் சாப்பிடுங்கள். ஏற்கனவே நேரம் அதிகமாகிவிட்டது. இனி மேலும் என்னல் இங்கேயே உட்கார்ந்து காத்துக்கொண்டிருக்க முடியாது" என்று திரும்பத் திரும்ப முறையிட்டுப் பிரார்த்தித் தான்.

ஆனல் சுவாமி விக்கிரகமோ பதிலே பேச வில்லை. சிறுவன் அழ ஆரம்பித்துவிட்டான். "பகவானே, உனக்கு அமுது படைக்கும்படி என் தந்தை என்னிடம் சொல்லிப் போயிருக் கிருர். நீ ஏன் கீழே இறங்கி வந்து இன்னும் சாப்பிடாமலே இருக்கிருய்?" என்று அவன் கண்ணீரும் கம்பலையுமாக, சுவாமி விக்கிரகத் தைப் பார்த்துப் புலம்பிக்கொண்டிருந்தான்.

இவ்விதம் பகவான் விரைவில் வந்துவிடுவார் என்ற மகத்தான உறுதியுடன் அவன் சிறிது நேரம் பிரார்த்தித்துப் புலம்பியதும், இறுதி யில் தெய்வம் புன்முறுவல் தவழப் பீடத் திலிருந்து இறங்கி வந்து அங்கு வைத்திருந்த அன்ன நைவேத்தியத்தின் முன் அமர்ந்து அதை உட்கொள்ள ஆரம்பித்தது.

அவ்விதம் தெய்வம் படைக்கப்பட்ட நைவேத்தியத்தை உட்கொண்ட பிறகு சிறுவன் பூஜையறையிலிருந்து வெளியே வந் தான். அப்போது அவனது வீட்டார், "பூஜை முடிந்துவிட்டது. இப்போது படைதத பிரசா தத்தை எடுத்துக்கொண்டு வா" என்று அவனிடம் கூறினர்.

சிறுவனே, "ஆமாம். பூஜை முடிந்துவிட்டது. பகவான் நைவேத்தியமாகப் படைத்த எல்ல

வற்றையும் சாப்பிட்டுப் போய்விட்டார்'' என்று உறவினரிடம் தெரிவித்தான். "அது எப்படியப்பா?'' என்று உறவினர் அவனைக் கேட்டனர். சிறுவன் கள்ளங்கபடமற்றவன். எனவே அவன், "ஏன் பகவான் படைத்த நைவேத்தியங்களைச் சாப்பிட்டார்'' என்று ஸரள மனப்பான்மையுடன் சொன்னதைக் கேட்ட வீட்டார் அனைவரும் பூஜையறைக்குள் சென்று பார்த்தார்கள். அங்கே படைக்கப் பெற்ற நைவேத்தியம் முழுவதும் ஒரு பருக்கை கூட இல்லாமல் அருந்தப்பெற்றிருப்பதைக் கண்டு அவர்கள் பெரிதும் வியப்பில் ஆழ்ந் தனர்.

* * *

மாலைநேரம் ஆயிற்று. சூரியன் அஸ்தமிக்கும் சந்திவேளை வருவதற்கு இன்னும் நேரம் இருந்தது. ஸ்ரீராமகிருஷ்ணரும் ம-வும் நஹபத்தின் தென்பக்கத்தில் நின்று பேசிக் கொண்டிருந்தனர். அவர்கள் இருந்த இடத்திற்கு எதிரில் புனித கங்கை அமைதியுடன் ஓடிக்கொண்டிருந்தது. அது குளிர் காலம்; ஆதலால் குருதேவர் ஒரு கம்பளச் சால்வையைப் போர்த்திக் கொண்டிருந்தார்.

ஸ்ரீராமகிருஷ்ணர்: நீ எங்கே தூங்கப் போகிறாய்? பஞ்சவடியில் இருக்கும் குடிசையிலா?

ம-: நஹபத்தின் மேல்மாடியில் இருக்கும் அறையை எனக்குத் தரமாட்டார்களா?

குருதேவர் கோவிலைச் சேர்ந்த நிர்வாக அதிகாரியிடம் ம-வைப் பற்றித் தெரிவித்து அவர் தங்குவதற்கு உரிய ஓர் இடத்தை ஏற்பாடு செய்து தரச் சொன்னார்.

நஹபத்தின் மேல்மாடி ம—வுக்கு பிடித்திருந்தது. அவர் கவிதையுள்ளம் படைத்தவர். நஹபத்தின் மேல்மாடியில் இருந்தபடி ஒரே சமயத்தில் அவர் ஆகாயத்தையும் புனித கங்கையையும், சந்திரனையும், தோட்டத்து வண்ணப் பூக்களையும் பார்த்து ரசிக்க விரும்பினார்.

ஸ்ரீராமகிருஷ்ணர்: ஓ! நீ விரும்புவதைப் போலவே நஹபத்தின் மேல்மாடி அறையை நிச்சயம் அவர்கள் உனக்குத் தருவார்கள். ஆனால் பஞ்சவடியில் இருக்கும் குடிசையில் நீ தங்கியிருக்க வேண்டும் என்று நான் ஏன் உனக்கு யோசனை சொன்னேன் தெரியுமா? அங்கு எவ்வளவோ தியானமும் நாமஜபமும் நடைபெற்றிருக்கின்றன என்பதற்காகத்தான் அந்த இடத்தை உனக்குக் கூறினேன்.

மாலை சூழ்ந்தது. குருதேவரின் அறையில் தூபம் போடப்பட்டு நறுமணப் புகை கமழ்ந்து கொண்டிருந்தது. அங்கே சிறிய கட்டிலின் மீது அமர்ந்து ஸ்ரீராமகிருஷ்ணர் தியானத்தில் அமர்ந்திருந்தார். ராக்கால், லாட்டு, ராம்லால் ஆகியோருடன் ம—வும் அந்த அறையில் தரையில் உட்கார்ந்திருந்தார்.

குருதேவர், "சுருக்கமாகச் சொன்னால் விஷயம் இதுதான். மனிதன் தெய்வபக்தியை வளர்த்துக்கொள்ள வேண்டும். ஆண்டவனிடம் அவன் மனப்பூர்வமாக அன்பு செலுத்த வேண்டும்—இதுதான் விஷயம்'' என்று ம-விடம் கூறினார். பிறகு ஸ்ரீராமகிருஷ்ணர் ராம்லாலைப் பக்திபாடல்கள் சிலவற்றைப் பாடும்படி பணித்தார். ராம்லால் இனிய குரலில் பாடினார். குருதேவரே ஒவ்வொரு பாட்டுக்கும் முதல் அடியை எடுத்துக் கொடுத்து ஆரம்பித்து வைத்தார்.

குருதேவரின் சொற்படி ராம்லால் முதலில் ஸ்ரீகௌராங்கரின் சன்னியாசம் பற்றிய பாடலைப் பாடினார். ○

தர்மம் தலைகாக்கும் என்பார்கள். ராகவன் தைரியத்தோடு, நியமத்தோடு பரிபாலனம் செய்துவந்த தர்மம்தான் எத்தனையோ ஆபத்துக்கள் காட்டில் வந்த போதிலும்கூட அவன் தலையை ரட்சித்தது. ராவணனுக்குப் பத்து தலைகள் இருந்த போதிலும் அவன் செய்த அதர்மமானது அவனுடைய ஒரு தலையைக்கூட ரட்சிக்கவில்லை. பத்துத் தலைகளில் ஒன்றுகூட இல்லாமற் போய்விட்டது.

—ஒரு துறவி

விஜயதீபம்

காசி நினைவுகள்

இந்த இதழின் முகப்பில் அன்னபூரணியின் திருவுருவப்படம் இடம் பெற்றுள்ளது. தீபாவளியின்போது காசி அன்னபூரணி கோவிலில் தங்க அன்னபூரணியைத் தரிசிப்பது மிகவும் விசேஷமாகக் கருதப்படுகிறது.

காசியில் மணிகர்ணிகை கட்டத்தில் செய்யும் ஜபம், தியானம், பிரார்த்தனை ஆகியவை சித்தியைத் தரும் (நிச்சயம் நிறைவேறும்) என்ற நம்பிக்கை மக்களிடையே ஆண்டாண்டுக் காலமாக இருந்து வருகிறது.

காசியில் ஒரு தடவை செய்யும் நாமஜபத்திற்கு ஆயிரம் மடங்கு பலன் உண்டு. மற்ற இடங்களில் ஆயிரம் தடவை செய்யும் நாம ஜபத்தின் பலன் காசியில் ஒரு தடவை ஜபித்தாலே கிட்டும்.

காசியில் செய்யும் எந்தச் செயலும் ஆயிரம் மடங்காகப் பயனைத் தரும்—இந்த உண்மை நல்ல செயல்களுக்கும் பொருந்தும், கெட்ட செயல்களுக்கும் பொருந்தும். காசியின் மகத்துவத்தை உள்ளபடியே உணர்ந்து காசிவாசத்தைப் பயன்படுத்த வேண்டிய வகையில் முறையாக ஆன்மிகமாகப் பயன்படுத்தினால் காசிவாசம் ஒப்பற்றதுதான் என்பதில் ஐயமில்லை.

காசியில் இறக்கவேண்டும் என்று அதிக வாடகை கொடுத்துச் சிறிய இடத்தில் வசிக்கிறார்கள்; அதிகப் பணம் செலவு செய்து வாழ்கிறார்கள்; பல ஆண்டுகள் அப்படி வாழ்கிறார்கள். ஆனால் ஏதோ வேலையாகவோ அல்லது ஊருக்குப் போய்வரும் எண்ணத்துடனே காசியை விட்டுச் சென்று வேறு எங்கோ இறந்து போகிறார்கள்—இவ்விதம் பலரது வாழ்க்கையில் நடந்திருக்கிறது.

காசி யாத்திரைக்கென்று கொண்டுவந்த பணத்தைக் காசியிலேயே தெய்வத் தொண்டிற்காகவும் தானதர்மங்களுக்காகவும் செலவழித்துவிடவேண்டும்; திரும்பவும் ஊருக்குக் கொண்டுபோகக்கூடாது. மீண்டும் ஊருக்குத் திரும்ப எவ்வளவு பணம் வேண்டுமோ, அவ்வளவு பணத்தை மட்டும் வைத்துக் கொண்டு மற்றப் பணம் முழுவதையும் காசியிலேயே செலவழித்துவிடவேண்டும்—இது ஒரு நல்ல மனப்பான்மை ஆகும்.

‘காசியில் இறப்பது நல்லது, பிறப்பது நல்லதல்ல’ என்று காசிவாசிகள் கருதுகிறார்கள்.

‘‘காசியில் பாவம் என்பதே இல்லை. காசியில் பாவம், அடாத செயல், அதர்மம் என்று எதையேனும் நீங்கள் கண்டால், அப்படி ஏதேனும் உங்களுக்குத் தோன்றினால், அதைச் சிவபெருமானின் லீலை என்று உணர்ந்துகொள்ளுங்கள்; சிவபெருமானே அதைக் காசியில் அனுமதித்திருக்கிறார் என்று புரிந்துகொள்ளுங்கள். மற்றப்படி காசியில் பாவம் என்பதற்கே இடமில்லை’’ என்று முதியவர் ஒருவர் கூறினார்.

இவ்விதம் அவர் குறிப்பிட்டதனால் காசியில் தீய சொல், செயல், சிந்தனைகளுக்கு இடம்

தந்து வாழலாம் என்பது பொருளல்ல. இங்கே செய்யப்படும் தீய சொல், செயல், சிந்தனை களும் ஒன்றுக்கு ஆயிரமாகப் பலனை விளைவிக்கும். எனவே காசியில் தீய வாழ்க்கைக்கு இடம் தந்துவிடாமல் மிகமிகக் கவனத்துடன் வாழவேண்டும் என்பதற்காகத்தான் 'காசி வாசமோ ஊசிவாசமோ' என்ற வசனம் எழுந்துள்ளது.

'உலகில் எந்த இடத்தில் செய்த பாவமும் காசிக்குச் சென்றால் கழியும்; காசியில் செய்த பாவம் எந்த இடத்திற்கு சென்றாலும், எந்த உலகத்திற்குச் சென்றாலும் கழியாது' என்று ஆன்றோர் குறிப்பிட்டுள்ளார்கள். மற்ற இடங்களில் செய்த பாவம் காசியில் தீரும், காசியில் செய்த பாவம் எங்கே சென்றாலும் தீராது.

'காசியில் பாவமே இல்லை; சிவலீலை' என்பது காசியை எப்படிப் பார்க்க வேண்டும் என்பதையும் நல்வாழ்க்கையே வாழ்ந்து வரும் ஒருவரது உயர்ந்த மனநிலையையும் குறிப்பிடுகிறது.

காசியில் வாசம் செய்யச் செய்யக் கர்மவினை அகன்றபடியே இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. மற்ற இடங்களில் வாசம் செய்யச் செய்யக் கர்மவினை மேன்மேலும் சேர்ந்தபடியே இருக்கும்; காசியில் வாசம் செய்யச் செய்யக் கர்மவினை கரைந்தபடியே இருக்கும் என்கிறார்கள்.

காலமெல்லாம் காசியிலேயே வாழ்வார்கள்; காசியில் இறந்து போகவேண்டும் என்று முப்பது முப்பத்தைந்து ஆண்டுகள் அங்கேயே இருப்பார்கள். ஆனால் ஏதோ ஒரு காரணத்தை முன்னிட்டுக் காசியை விட்டு வெளியே வந்தபோது காசிக்கு வெளியிலேயே இறந்து போவார்கள்.

காசியில் இறந்து முக்தி பெறுவதற்குத் தகுதியற்றவர்களை, அவர்கள் எவ்வளவு காலம் தான் காசியில் வாழ்ந்தவர்களாக இருந்தாலும்கூட ஏதேனும் ஒரு புறக் காரணத்தைக் காட்டி அவர்களைக் காசியைவிட்டு தண்டபாணி பைரவர் வெளியேற்றிவிடுகிறாராம். இந்தப் பணியை தண்டபாணி பைரவரிடம் காசி விசுவநாதர் ஒப்படைத்திருப்பதாகக் கந்தபுராணம் கூறுகிறது.

காசியில் புதிதாக வீடு கட்டுவதானால் சிவலிங்கப்பிரதிஷ்டை செய்த பின்பே வீடு கட்டத் துவங்குவார்களாம். முற்காலத்தில் காசியில் வீட்டைத் தானமாகத் தருவது வழக்கத்தில் இருந்தபோது, தானமாகத் தரும் வீட்டில் ஒரு சிவலிங்கத்தையும் பிரதிஷ்டை செய்தே தானம் வழங்குவார்களாம்.

இப்போதும் புதிதாக வீடுகட்டும்போது பூமிக்கடியில் சிவலிங்கங்கள் அகப்படுகின்றன. அவற்றை எங்காவது பிரதிஷ்டை செய்துவிட்டுப் பின்பு வீடு கட்டுகிறார்கள்.

காசி முழுவதும் பூமிக்கடியில் சிவலிங்கங்கள் இருக்கின்றன என்ற ஐதிகம் இருந்து வருகிறது. பூமிக்கடியில் சிவலிங்கங்கள் இருப்பதனால் இங்கே பிணங்களைப் பூமியில் புதைப்பதில்லை. பிணங்களை இங்கு எரிக்கவோ கங்கையில் வீசவோ செய்கிறார்கள். மாடு, நாய், பூனை இறந்தாலும் அவற்றை இங்கே கங்கையில்தான் எறிந்துவிடுகிறார்கள்.

அன்னபூரணியின் பரிபூரண சாந்நித்தியம் உள்ள இடம் காசி க்ஷேத்திரம். எனவே இங்கு அன்னதானம் செய்வது விசேஷம். ஆகவே இங்கு நாள்தோறும் அன்னதானம் நடைபெறும் இடங்களும் நிறைய உள்ளன.

மார்வாரிகள் அவ்வப்போது 'தசாச்வமேத காட்' என்ற இடத்தில் சப்பாத்தி, பருப்பு, லட்டு ஆகியவற்றை லாரிகளில் கொண்டு வந்து தானம் செய்கிறார்கள். விறட்டிகளை அடுக்குவதுபோல லாரி நிறையச் சப்பாத்திகளை அடுக்கிக்கொண்டுவந்து தானம் செய்கிறார்கள். எல்லோருக்கும் தானம் வழங்கி எஞ்சிய பருப்பு வழிந்தோடும், லட்டுகள் உருண்டோடும்—இவ்விதம் அன்னதானம் செய்யும் காட்சியைத் தமிழ்நாட்டில் காண்பது அரிது. அன்னதானம் செய்வதை வடநாட்டில் அதிலும் குறிப்பாக ஹ்ரிஷீகேசம், காசி ஆகிய இடங்களில் பார்க்கவேண்டும்.

காசியில் இப்போதுள்ள விசுவநாதர் கோவில் அஹல்யாபாய் கட்டியது. இதற்கு முன்பு விசுவநாதர் கோவில் இருந்த இடத்தில் இப்போது மசூதி உள்ளது. அதற்கும் முன்பு விசுவநாதர் கோவில் இருந்த இடம் இப்போது ஆதிவிசுவேசுவரர் கோவில் எனப் படுகிறது. எனவே இப்போதுள்ள விசுவநாதர் கோவில் விசுவநாதருக்காகக் கட்டப் பெற்ற மூன்ருவது கோவிலாகும். நாம் அறிந்த இந்த மூன்று கோவில்களைத் தவிரவும் அவற்றுக்கு முன்பு விசுவநாதர் கோவில்கள் இருந்திருக்கக்கூடும்.

காசியில் ஒரு பகுதி 'விச்வேஞ்சர் கஞ்ச்' என்ற பெயரில் வழங்கி வருகிறது. அங்கும் ஒரு காலத்தில் விசுவநாதர் கோவில் இருந்ததோ என்னவோ; அதனுல்தான் அந்தப் பகுதி 'விச்வேச்வர் கஞ்ச்' என்று வழங்கப் பெறுகிறது.

சீன யாத்திரிகரான யுவான்சுவாங் தாம் எழுதியுள்ள பயண நூலில், '108 அடி உயரத்தில் பித்தளைக் கவசம் பூண்டு காசி விசுவநாதரின் சிவலிங்கம் இருந்தது' என்று குறிப்பிடுகிருர். அவ்விதம் அவர் குறிப்பிடும் விசுவநாதர் கோவில் காசியில் எந்த இடத்தில் இருந்தது என்பது தெரியவில்லை. காலவெள்ளத்தில் ஒன்று அழிக்கப்பட்டு மற்ருென்ருக விசுவநாதர் கோவில்கள் எழுந்துள்ளன.

காசியில் முப்பத்துமுக்கோடி தேவர்களுக்கும் கோவில் உண்டு என்கிருர்கள். அவ்விதம் முப்பத்துமுக்கோடி தேவர்களுக்கும் முன்பு ஒரு காலத்தில் வேண்டுமானுல் கோவில்கள் இருந்திருக்கக்கூடும், இப்போது இல்லை.

இஸ்லாமியர்களின் ஆதிக்கத்தின் விளைவாகப் பல்வேறு காலங்களில் காசியில் இருந்த கோவில்கள் அழிக்கப்பட்டன.


கேதாரகட்டத்திலுள்ள கேதாரநாதர் கோவில் ஒன்றுதான் பழமையான கோவில், காசியிலுள்ள ஏனைய கோவில்கள் அனைத்தும் பிற்காலத்தில் எழுந்த புதிய கோவில்களே ஆகும்.

கேதாரநாதர் கோவில் வீடு போன்று இருப்பதனுலும், அதிலுள்ள கேதாரநாதரின் ஸ்வயம்பு லிங்கம் பாறை போன்று காணப்படுவதனுலும், இஸ்லாமியர் அந்தக் கோவிலை அறவே அழிக்காமல் விட்டுவிட்டார்கள் போலும்.

குமரகுருபரர் காசிக்கு வந்தபோது கேதாரநாதரின் கோவில் பாழடைந்தே இருந்திருக்கிறது. குமரகுருபரர் கேதாரநாதரின் கோவிலைத் திருப்பணி செய்து புதுப்பித்ததாக அவரது வரலாற்றில் காண்கிறது.

'காசியில் பூவும் பிணமும் நாருது' என்பார்கள். பிணவாடை, பிணநாற்றம் என்று மற்ற இடங்களில் சொல்வதுபோல் காசியில் பிணம் துர்நாற்றமெடுப்பதில்லை. மணிகர்ணிகையில் ஒரே சமயத்தில் பதினுன்கு பிணங்கள் எரிவதைப் பார்த்திருக்கிறேன். அங்கே ஒரு பிணம் எரிந்தாலும் ஒன்பது பிணம் எரிந்தாலும் பிணநாற்றம் என்பதே இல்லை.

காசியில் 'பாஸ்பாடக்' அருகில் பெரிய பூக்கடை இருக்கிறது. அங்கிருந்து பூ வாங்கிச் சென்றே காசியில் மற்ற இடங்களில் பூ வியாபாரம் செய்கிருர்கள். அப்படி மொத்தமாகப் பூ வியாபாரம் நடைபெறும் இடத்துக்குச் சென்ருலும் பூவின் மணத்தை நுகர முடியவில்லை. அவ்வளவு பூ வேறு இடத்தில் இருப்பின் அந்த இடமே பூவாசனையினுல் சூழப் பெற்றிருக்கும். காசியிலோ பூவிற்கு மணம் இல்லை.



மனிதனைத் தோல்வியுறச் செய்து எக்களிக்கும் ஐம்புல விருப்பங்களையும், விஷய வாசனைகளையும், தூய எண்ணங்கள் ஆன்மிகச் சக்தியுடன் அழித்து வென்றதே, விஜயதசமி விழாவாகக் கொண்டாடப்படுகிறது. உத்தராயணம் என்பது உத்தம அயனம்! தெய்விக ஆண்டு பிறக்கும் அன்று, புத்திதேவதையான சூரியன் கைலாயத்தை நோக்கித் தன் வடதிசைப் பயணத்தைத் தொடங்குகிருன். வெள்ளத்தோடு நீந்துவதைப் போன்று சூரியனைத் தொடர்ந்து ஆன்மிக சாதனைகளில் முன்னேறுங்கள்.

—ஒரு மகான்

தரிசனத்தால் பெறும் இன்பம்

கி. வா. ஜகந்நாதன்

இறைவன் எல்லாரையும் விடப் பெரியவன். எல்லாப் பொருள்களினும் மேம்பட்ட பரம் பொருள் அவன். மேலானதென்று சிலர் நினைக்கும் எல்லாவற்றையும்விடப் பெரியவன். அதனால் அவனைப் பராபரன் என்று சொல் வார்கள்.

அத்தகைய பெருமானுடைய தரிசனம் கிடைத்தால் எத்தகைய இன்பத்தை அடைய லாம்! அவனைக் காணும்படியான அநுபவம் கிடைத்தால் அது மிகப் பெரிய பேறு ஆகும். அந்தப் பேறு யாவருக்கும் கிடைப்பதன்று.

அவனுடைய திவ்ய தரிசனம் கிடைத்தால் உணர்ச்சி வயப்பட்டு அன்பர்கள் எப்படி எப்படியோ குதுகலிப்பார்கள். பலவகையில் தம் பக்தி உணர்ச்சியைக் காட்டுவார்கள்.

காரைக்கால் அம்மையார், "இறைவனு டைய திவ்யதரிசனம் கிடைத்தால் இப்படி யெல்லாம் செய்வேன்" என்று சொல்கிறார்.

பெரியானைக் காணப் பெறின்

தாம் செய்வன இவை என்று அவர் சொல் வதைக் கேட்கலாம்.

பெருமானுடைய அழகுக் காட்சி காணக் காண இனிக்கும். ஒருகால் பார்த்தால் போதாது; கண்ணை அகல விரித்துப் பருகுவது போன்ற ஆர்வத்தோடு பார்க்கலாம். கண் ணாரக் கண்டு மகிழலாம்! அப்படிக் காண்பேன் என்கிறார் அம்மையார்.

கண் ஆரக் கண்டும்.

பலகால் பார்த்துப் பார்த்துத் தம் கண்களில் இறைவன் திருவுருவே நிரம்பி நிற்கும் அநு பவம் அவருக்குக் கிடைக்கிறது. பார்த்துக் கொண்டே தம்மை மறந்து நின்றவர், சிறிது உணர்வு வரப் பெற்று, 'எம்பெருமான் அல்லவோ நம் முன் நிற்கிறான்? இவனைப் பார்த்துக் கொண்டேயிருந்தால் போதுமா? இவன் நமக்கு நேர்பட்டானே என்ற மகிழ்ச்சி யில் செய்ய வேண்டியதை மறக்கலாமோ? இவனை வணங்க வேண்டாமோ?' என்ற எண்ணம் தோன்றும். உடனே கைகளைக் கூப்புவாராம். கைகளை நன்கு இணைத்துக் கும்பிடுவாராம்.

கையாரக் கூப்பியும்.

கைகள் அவனைக் கும்பிடுவதற்காகவே இருக் கின்றன என்ற உண்மையை உணர்ந்து கைகளின்செயல் நிரம்பும்படியாகக் கூப்புவார்.

நம்முடைய இந்திரியங்கள் இரு வகைப்படும். ஞானேந்திரியங்கள், கண்மேந்திரியங்கள் என்பவை அவை. கண், காது, மூக்கு, சுவை யுணரும் நாக்கு, தோல் என்பவை ஞானேந் திரியங்கள். இவற்றில் கண் தலைமையானது.

"கண்ணிற் சிறந்த உறுப்பில்லை"

என்பார்கள்.

அத்தகைய சிறந்த இந்திரியத்தால் சிறந்த செயலைச் செய்வதுதான் அறிவு படைத்தவர்

மனிதனைத் தோல்வியுறச் செய்து எக்களிக்கும் ஐம்புல விருப்பங்களையும், விஷய வாசனைகளையும், தூய எண்ணங்கள் ஆன்மிகச் சக்தியுடன் அழித்து வென்றதே, விஜயதசமி விழாவாகக் கொண்டாடப்படுகிறது. உத்தராயணம் என்பது உத்தம அயனம்! தெய்விக ஆண்டு பிறக்கும் அன்று, புத்தி தேவதையான சூரியன் கைலா யத்தை நோக்கித் தன் வடதிசைப் பயணத்தைத் தொடங்குகிறான். வெள்ளத்தோடு நீந்துவதைப் போன்று சூரியனைத் தொடர்ந்து ஆன்மிக சாதனைகளில் முன்னேறுங் கள்.

—ஒரு மகான்

களுக்கு அழகு. எதைக் காண வேண்டும், எதைக் கண்டால் மற்றவற்றைக் காணுவதால் பெற முடியாத பெரிய இன்பத்தைப் பெறலாம் என்பதை அறிந்து செய்ய அறிவுடைய மனித ரால்தான் முடியும். ஆகவே இறைவன் திரு வடிவைத் தரிசிப்பதே கண் படைத்த பயன் என்று அன்பர்கள் எண்ணுவார்கள். அவனைக் கண்ணாரக் கண்டு களிப்பார்கள்.

கை, கால், பேசும் வாக்கு, எருவாய், கரு வாய் என்பன கன்மேந்திரியங்கள். மனிதனுக் குத்தான் எடுக்கவும் கொடுக்கவும் ஆற்றல் பெற்ற கைகள் இருக்கின்றன. குரங்குகளுக்குக் கை இருந்தாலும் அது காலாகவும் பயன்படும். யானைக்குத் துதிக்கை இருந்தாலும் நம் முடைய கையைப்போல இல்லை. ஆகவே நல்ல முறையில் அமைப்பான கைகளைப் படைத்த மனிதன் அந்தக் கைகளால் மிகச் சிறந்த செயலைச் செய்ய வேண்டும்.

"கைகாள் கூப்பித் தொழீர்"

என்று அப்பர் சுவாமிகள் திருவங்க மாலையில் கைக்குரிய பணி இன்னதென்பதைச் சொல் கிறார். இறைவனைக் கூப்பித் தொழுவதே கை களுக்குரிய சிறப்பு. அம்மையாரும்,

கையாரக் கூப்பியும்

என்கிறார்.

கரணங்கள் மூன்று. அவை உடல், உரை, மனம் என்பவை. உடம்பிலுள்ள இந்திரியங் களில் சிறந்தவற்றை இறைவனுடைய வழி பாட்டில் ஈடுபடுத்திய அம்மையார் இனி மற்றக் கரணங்களையும் ஈடுபடுத்துவதைப் பற்றிச் சொல்ல வருகிறார்.

மனம் முழுவதும் நிரம்ப இறைவனுடைய வடிவத்தையும் புகழையும் எண்ணி எண்ணி இன்புறுவது அன்பர்களின் இயல்பு. சுவை யுள்ள தின்பண்டங்களைக் கண்டு மகிழலாம். அதோடு நின்றுவிட்டால் பயன் என்ன? அவற்றை உண்டு மகிழ வேண்டும். அப்படியே இறைவன் திருவுருவத்தைக் கண்டும் கை கூப்பியும் மகிழ்வதோடு நில்லாமல் அதை உட்கொள்ள வேண்டும். உள்ளமெல்லாம் நிறைய நம் எண்ணங்களெல்லாம் அந்த உருவம் பற்றியவையாகவே அமையத் தியானம் செய்ய வேண்டும். அம்மையார் அப்படி எண்ணி இன்புறுகிறவர்.

எண் ஆர எண்ணத்தால் எண்ணியும்.

தொழுது தியானித்து இன்புற்றால் அந்த இன்ப உணர்ச்சி பொங்கி வரும். அதனால் நம்மை அறியாமலே வாய் திறந்து அந்த உணர்ச்சியை வெளிப்படுத்துவோம். இன்ப உணர்ச்சி மிகும்போது நாம், "அம்மாடி! அப்பாடி!" என்று சொல்வோம். வயிறார உண்டவன் ஏப்பம் விடுவது போல அத்தகைய சொற்கள் நம் வாயினின்று எழும்.

ஆனால் அன்பர்கள் இன்ப உணர்ச்சியில் ஆழ்ந்திருக்கும்போது அவர்கள் வாயிலிருந்து இறைவன் திருநாமங்களே எழும். அவனுடைய பெருமையை எண்ணி அந்தப் பெருமையை விளக்கும் திருப்பெயர்களையே உணர்ச்சி மிகுதி யினால் அவர்கள் சொல்லுவார்கள். அம்மையார் எவ்வாறு சொல்வார்?

தேவர்களுக்கெல்லாம் பெரிய தேவன் அவன்; மகாதேவன். அவனை வாயார வாழ்த்த புகுந்து,

விண்ணோன்

என்பாராம். அவன் தீயினில் நின்று ஆடும் திறனுடையோன். அவன் திருமேனி தீயைப் போன்றது. பெருந்தீப்பிழம்பாகிய அவனுக்கு இந்தப் பௌதிகத் தீச்சுடாது. அது புனல் போலக் குளிர்ந்திருக்கும். அதை எண்ணி,

எரியாடி

என்பாராம். இப்படி ஒரு முறையா சொல் வார்? இன்ப உணர்ச்சி மிகும்போது ஒரு சொல்லையே மீட்டும் மீட்டும் சொல்வது மனித இயல்பு. அரிய நண்பர் வருவதைக் கண்டால் பல முறை, "வா, வா, வா, வா" என்று சொல்லுவோம். எதையாவது கேட்டு மகிழ்ந்தால், "பேஷ்! பேஷ்! பேஷ்!" என்று பலமுறை சொல்வோம்.

அம்மையாரும், 'விண்ணேன், எரியாடி' என்று ஒருமுறை சொல்வதோடு நிற்கமாட்டார். பலமுறை திரும்பத் திரும்ப அவற்றையே சொல்லி இன்புறுவாராம். உணர்ச்சி மிகும் போது பலபல வார்த்தைகளை நினைந்து சொல்லும் இயல்பு இராது. ஒன்றையே திருப்பித் திருப்பிச் சொல்வோம். அப்படி, 'விண்ணேன், விண்ணேன், எரியாடி, எரியாடி' என்று பலமுறை சொல்லிச் சொல்லி உணர்ச்சியிலே மிதப்பார் அம்மையார்.

விண்ணேன் எரி ஆடி என்று என்றும் இன்புறுவன்.

இறைவன் திருக்காட்சியைக் கண்டபோது கண்ணுக்கு இன்பம்; கருத்துக்கும் இன்பம். கை கூப்பும்போது கரத்துக்கும் இன்பம்; மனதுக்கும் இன்பம். மனதுக்குள் அவன் உருவத்தை எண்ணும்போது அங்கே இன்பமே நிரம்பும். 'விண்ணேன், எரியாடி' என்று சொல்லும் நாவுக்கும் உள்ளத்துக்கும் இன்பம் உண்டாகும்.

"பேசப் பெரிதும் இனியாய் நீயே" என்று அப்பர் பாடுவார்.

'பெரியவனுகிய இறைவனைக் காணும் பேறு பெற்ருல் இவ்வாறெல்லாம் செய்து இன்புறுவேன்' என்று சொல்கிருர் அம்மையார், இந்தப் பாட்டில்.

கண் ஆரக் கண்டும்என் கைஆரக் கூப்பியும்
எண் ஆர எண்ணத்தால் எண்ணியும்—விண்ணேன்
எரியாடி என்றுஎன்றும் இன்புறுவன் கொல்லோ!
பெரியானைக் காணப் பெறின்.

எல்லாரினும் பெரியவனுகிய சிவபெருமானைத் தரிசிக்கும் பேறு பெற்ருல், அவனை என் கண் நிரம்பும்படியாகப் பார்த்தும், என் கைகள் நிரம்பக் கும்பிட்டும், மனம் நிரம்பும்படியாக அவனைப் பற்றிய எண்ணங்களை எண்ணியும், 'மகாதேவனே! எரியாடியே' என்று பலகால் சொல்லியும் இன்பம் அடைவேன்.

கண்கள் வேறு ஒன்றைப் பாராமல் அவனையே பார்த்தல், கண்ணுரக் காணல். கைகள் முழுவதும் பொருந்திக் கும்பிடுதல் கை ஆரக் கூப்பல். எண்—மனம்; ஆகுபெயர். மனம் நிரம்பும்படி தியானித்தலைச் சொன்னுர். எண்ணத்தால்—எண்ணங்களை; உருபுமயக்கம். என்று என்றும்—என்றென்று பலகால் சொல்லியும்.

கண்டும் கூப்பியும், எண்ணியும், என்றும் என்பவற்றில் உள்ள உம்மைகள் எண்ணும்மைகள்.

கண் காணுவதும் கை கூப்புவதும் மெய் என்னும் கரணத்தின் செயல்கள்; எண்ணுதல் மனம் என்னும் கரணத்தின் செயல்; என்றென்று கூறுதல் வாக்கு என்னும் கரணத்தின் செயல்; மூன்று கரணங்களின் செயல்களையும் கூறினுர். கரணங்கள் யாவும் இறைவனிடம் ஈடுபட்டு நிற்பதைச் சொன்னுர். கண்ணும் கையும் வாயும் புறக்கரணங்கள். மனம் அகக்கரணம். உள்ளும் புறம்பும் இறைவன் மயமாக நின்று இன்புற்ருர் அம்மையார்.

கொல், ஓ: இரண்டும் அசைகள். ஐயமாகக் கொண்டு, "அவனைக் கண்ட இன்பத்தில் செயலிழந்து நிற்பேனே, அன்றி இவற்றைச் செய்வேனே?" என்றதாகவும் கொள்ளலாம். அந்தப் பொருள் கொள்ளும்போது, ஓ: அசை.


செயின் எனும் வாய்பாடமைந்த பெறின் என்பது பெறுவதன் அருமையைக் காட்டியது. பெறின், கண்டும், கூப்பியும், எண்ணியும் இன்புறுவன் கொல்லோ என்று முடிக்க.]

இறைவனுடைய தரிசனத்தால் கரணங்கள் யாவும் தெய்விக இன்பத்தை அடையும் என்பது கருத்து.

அற்புதத் திருவந்தாதியில் வரும் 85-ஆம் பாடல் இது. ○

நுட்பமான காரியமாக இருந்தாலும் அதை நன்ருக ஆலோசித்த பிறகே செயலில் இறங்கத் துணியவேண்டும்.

—ஔவையார்



தீபாவளி

ராஜம் ஜயராமன்

நமது சமுதாயம் சமயத்தையே அடிப்படையாகக் கொண்டு இயங்கி வருகிறது. நாம் சமயக் கண்ணோட்டத்திலேயே வாழ்வின் எல்லா நடவடிக்கைகளையும் பார்க்கிறோம். ஏனெனில் சமயம் மனிதனின் வாழ்க்கையை புனிதப்படுத்துவதற்கும் முழுமைபடுத்துவதற்கும் ஏற்பட்டதாகும்.

எனவே பாமர மனிதனை லௌகீக வாழ்வில் இருந்து சமய வாழ்க்கைக்குத் திருப்புவதற்காகவே உண்டானவை நமது பண்டிகைகளும் திருவிழாக்களும். இந்தத் திருவிழாக்களும் பண்டிகைகளும் மனிதனை ஆன்மிகப் பாதைக்கு அழைத்துச் செல்லவும் ஆன்மபலம் ஏற்படுத்துவதற்கும் மிகவும் தேவைப்படுகின்றன.

பண்டிகைகள் மனிதனின் தெய்வ நம்பிக்கைகளுக்கெல்லாம் ஓர் உறுதியான பிடிப்பாய் அமைந்து வழிபாட்டின் கிழ் நிலையில் இருந்து மேல் நிலைக்கு அழைத்துச் செல்கிறது.

பண்டிகைகள் வரும் திருநாட்கள் அனைத்தும் உலகில் தீமையை அழித்து நன்மையை உண்டாக்கிய இறைவனின் பெருமையைக் கொண்டாடும் நாளாகவே அமைந்தவை. இப்பண்டிகை நாட்களை ஒருவன் சரியான முறையில் பயன்படுத்திக் கொண்டு வாழ்வானாகில் அவன் தனக்கும் இறைவனுக்கும் இடையில் உள்ள தொடர்பைப் புதுப்பித்துக் கொண்டு ஆன்மிகப் பயணத்தில் முன்னேறுவான்.

வருடத்தின் எல்லா மாதங்களிலும் பண்டிகைகளும், நோன்புகளும் உண்டு. இவைகளில் மிகவும் தனிச்சிறப்பு வாய்ந்தது தீபாவளிப் பண்டிகையாகும். இந்தப் பண்டிகை நமது நாட்டின் எல்லாப் பகுதி மக்களாலும் கொண்டாடப்படும் ஒரு பொதுத் திருவிழாவாகும்.

இந்தத் தீபாவளி பண்டிகையை ஒவ்வொரு பகுதி மக்களும் ஒவ்வொரு விதமாகக் கொண்டாடி வருகின்றனர். அன்றைய தினம் அவரவர்களின் பழக்கங்களுக்கு ஏற்ப பலவிதமான முறையைக் கையாண்டு வருகின்றனர்.

தீபம்—என்றால் விளக்கு, ஆவளி—என்றால் வரிசை அதாவது தீப வரிசை என்று பொருள். எனவே தீபத்தை வரிசையாக வைத்து இறைவனை வழிபடும் பண்டிகையே தீபாவளி ஆகும்'

பொதுவாக தீபாவளிப் பற்றி கூறும் புராண வரலாறு அனைவரும் அறிந்த ஒன்றாகும். அதாவது ஸ்ரீமகாவிஷ்ணு தமது கிருஷ்ண அவதாரத்தில் நரகாசூரன் என்ற அசுரனை அழித்த தினமே தீபாவளி என்பதாகும்.

இந்த நாளை இந்துக்கள் மட்டுமன்றி சமணர்களும் பௌத்தர்களும் கூட கொண்டாடுகின்றனர். இந்நாளில் சமணர்கள் மகாவீரர் மறைந்ததால் உலகில் இருள் சூழ்ந்துள்ளதென்று அதற்கு ஈடுசெய்ய விளக்கேற்றி அவரை வழிபடுவர்.

பலர் பலவிதமாகக் கொண்டாடும் இத்தீபாவளித் திருநாள் ஐப்பசித்திங்களில் வரும் திரயோதசி, சதுர்த்தசி ஆகிய நாட்களை மிக விசேஷமாகக் கொண்டு கொண்டாடப்படுகிறது.

துளசி, இந்த உலகில் பிறக்கும்போது நீ அழுதுகொண்டு பிறக்கிறாய், அப்போது உன்னைச் சுற்றியுள்ள உலகம் மகிழ்ந்து குலாவுகிறது. நீ இங்கிருந்து போகிறபோது சிரித்துக்கொண்டு போகவேண்டும், உன்னைச் சூழ்ந்துள்ள உலகம் அழுது புலம்பவேண்டும், அதற்கேற்ற வண்ணம் உன் செயல்கள் அமைக.

—துளசிதாசர்

அன்று சூரிய உதயத்திற்கு முன்பு எழுந்து நீராடி புத்தாடைகள் உடுத்தி விளக்குகள் ஏற்றி அதில் இலக்குமியை வழிபடுவர்.

அன்று எண்ணெய் தேய்த்து நீராடுவதைப் புனிதமாகக் கருதுவர். அந்த எண்ணெயில் 'இலக்குமி' வசிப்பதாகவும் நீரில் 'கங்கை' வசிப்பதாகவும் ஐதீகம்.

தமிழகத்தில் உள்ள சைவர்கள் தீபாவளியை சிவபெருமானின் திருநாளாகக் கருதி வழி படுவர். சிவ விரதமான கேதார கௌரி விரதமே தீபாவளியென்று கூறுவர். அப்போது அவர்கள், புரட்டாசி மாதம் வளர்பிறை அஷ்டமியில் தொடங்கி கும்பம் வைத்து அதில் சிவபெருமானை ஆவாகனம் செய்து இருபத்தியோரு இழையுடைய நூலைக் கையில் புனைந்து தினமும் வழிபடுவர். பின் ஐப்பசி மாத அமாவாசைக்கு முன்தினம் சதுர்த்தசியில் அதிகாலையில் நீராடி, தூய ஆடை அணிந்து நெல்லின்மீது கும்பம் வைத்து மாவிலை, தர்ப்பை, இவைகளை வைத்து கும்பத்தில் சிவ பெருமானை ஆவாகனம் செய்து தூப தீபம் காட்டி வழிபடுவர். மறுநாள் அமாவாசை அன்று காப்பை அவிழ்த்து பாரணை செய்து உணவு கொள்ள வேண்டும்.

இந்த விரதம் உமாதேவியார் இட பாகம் வேண்டி சிவபெருமானை நோக்கி இருந்த விரத மாகையால் இதனை 'கேதாரகௌரி விரதம்' என்பர்.

இந்நாளில் வடநாட்டில் வங்காளத்தில் உள்ள வர்கள் காளி பூஜை செய்து வழிபடுவார்கள். அன்று அவர்கள் ஸ்ரீதேவியை அழைத்து, மூதேவியை விரட்டும் நாளாகக் கொள்கிறார்கள்.

மேலும் சிலர் அன்று சாரதா பூஜை செய்து புதுக்கணக்கைத் துவங்குவர். அன்று இரவு செல்வத்திற்கு அதிபதியான குபேரனை வழிபடுவர்.

அன்று முக்கியமாக சூரியன் துலா ராசியில் பிரவேசிக்கிறான். எனவே சூரியனின் போக்கில் ஏற்படும் மாறுதலைக் குறிக்கும் நாளாகவும் கொள்வர்.

இது போன்று இந்துக்கள் பலவிதமாகத் தீபாவளித் திருநாளைக் கொண்டாடி வருகின்றனர். இது ஒரு பழமை வாய்ந்த தேசியத் திருவிழாவாகும்.

அன்பு மூன்று வகைப்படும்

அன்பு மூன்று வகைப்படும். முதல் வகை அன்பு, வெறும் தன்னல வேட்கையை அடிப்படையாகக் கொண்டது. அது 'நான்' என்ற முனைப்பு, பிற பொருளைத் தன் உடைமையாக்கிக் கொள்ளவேண்டும் என்ற ஆவலினால் உந்தப்பட்டு, அதில் கட்டுண்டு கிடக்கும் நிலையில் வெளிப்படும் அன்பு. ஒருவன் அந்த நிலையில் அடிப்படை ஆசைகளை மட்டும் பூர்த்தி செய்துகொள்வதில் சுறுசுறுப்பாக இருக்கிறான்.

இரண்டாவது வகையான அன்பு, செல்வர்களையும் செல்வாக்குடையவர்களையும் நாடி அவர்களிடம் பிணைக்கப்பட்டிருக்கும். இந்த வகையிலான அன்பும் தன்னலத்தையே அடிப்படையாகக் கொண்டதாகும்.

மூன்றாவது வகையான அன்பு உயர் நிலையானது. அது, 'என்றும் நிலைத்த, எங்குமுள்ள ஆத்மா, ஒவ்வொருவரிடத்திலும், எங்கிருந்தாலும் அவர்களிடம் ஊடுருவி நிற்கிறது' என்ற அறிவை அடிப்படையாகக் கொண்டது. அத்தகைய அன்பு சமத்துவ மனநிலையையும், முழுநிறை அமைதியையும், ஆனந்தத்தையும் தந்து உதவுகிறது.

—ஒரு மகான்

தியான வேளையிலே...

எப். ஜே. அலெக்சாண்டர்

குருவின் குரல் என் ஆத்மாவை நோக்கிக் கூறியது:—

“அடே, உன் உறுதியெல்லாம் எங்கே போயிற்று? உன் நம்பிக்கையெல்லாம் எங்கே போயிற்று? நேரும் ஒவ்வோர் அபாயத்தைக் கண்டும் நடுநடுங்கி ஓடுவதற்கு நீ என்ன ஒரு மிருகமா? தேகாத்மபுத்தியை விட்டொழித்து வெற்றி கொண்டாலன்றி உண்மைப் பொருளாகிய பரம்பொருளை நீ உணர முடியாது. நீ என்ன உயிரற்ற சவமா? தேக சம்பந்தமான சேற்றிலும் சகதியிலும் அகப்பட்டு என்றென்றும் நடனமாடிக் கொண்டிருப்பாயா என்ன? இந்த உன் சிறுமையிலிருந்து, அற்பத்தனத்திலிருந்து வெளியே வா! வெளியே வந்துவிடு! தீரனாக இரு! எப்போதும் வெளிப்படாமல் உள்ளடங்கியே கிடந்தால் உன் தெய்வத்தன்மைக்கு என்னதான் பிரயோஜனம்? அப்படியானால் நீ என்ன அவ்வளவு முக்கியமானவனா, உலகத்திற்குத் தேவைப்படுவதற்கு? நீ இல்லாவிட்டால் உலகம் நடைபெறாதா? ஆத்மாவைக் கொண்டே ஆத்மாவை ஜயித்து உயர்த்திக் கொள்! விடுதலையடை! அழிவற்ற ஓர் பொருளை நாடியடைய நீ போராடினால் மரணம் உன்னைத் தொட முடியாது; ஏனெனில் மரணம் என்பது இன்னது என்ற அறிவையே நீ இழந்திருப்பாய். அழிவற்ற தன்மையாம் நித்தியத்துவம், அமரத்துவம் உன்னுடையதாக இருக்கும். உலகம் முழுவதும் உண்மைப் பொருளை விளக்கத்தான் பாடுபட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால் இந்த முயற்சியில் முதல் வெற்றி நல்லொழுக்கம் பெறுவதே. நற்குண நல்லியல்புகளைப் பெறுவதில்தான் அனைத்தும் அடங்கியிருக்கிறது. நல்லொழுக்கங்களைப் பேணி வளர்ப்பாயாக! பேணி வளர்ப்பாயாக! ஒவ்வொரு கணமும் நல்லொழுக்கங்களை வளர்த்துக்கொள்ள முயல்வாயாக! எப்போதும் உன் ஆத்மாவிலேயே நிலைத்திருப்பாயாக. சாவற்ற பொருள் எதுவோ அதையே சிந்தனை செய்; நீயும் சாவற்றவனாக ஆகிவிடுவாய். சத்பொருள் ஒன்றையே உன் வாசஸ்தானமாகச் செய்து கொண்டுவிடு— அவ்விதம் செய்தாயானால், அப்போது பிறப்போ இறப்போ, மற்றப் பல திறப்பட்ட மாறி மாறி வருகிற வாழ்க்கையின் அனுபவங்களோ உன்னை அச்சுறுத்த முடியாது.

“இந்த உன் உடல் செத்து ஒழியட்டும்! அதைப் பற்றிக்கொண்டு தொங்குவதை விட்டுத் தொலை! மனதில் உன்னை விடுவித்துக் கொள்! ஆன்மிகம், தர்மசாஸ்திரம் இவற்றின் முழு அர்த்தமெல்லாம், மைதுனம், பயம், உறக்கம், உணவு இவற்றுக்கு உட்பட்டு அடங்கியிருக்கும் மிருக உணர்ச்சியை வெற்றி கொள்வதுதான்; இதை விட்டொழி! சவத்தைப் பிடித்துக்கொண்டு இப்படித் தொங்குவதை விட்டுத் தொலைத்துவிடு! அந்த மிருக உணர்வைச் சவமென்றே கருது. இப்படியே எப்போதும் அதைச் சவமென்றே கருது. அதன்மேல் ஜரிகைத் துப்பட்டாவைப் போட்டு மூடாதே! அது அசிங்கம். ஆத்மா ஒன்றே ஒன்றுதான் உண்மைப்பொருள் ஆத்ம உணர்வே அழிவற்ற தன்மை நித்தியத்துவம் ஆகும். அழிவற்ற எண்ணங்களைச் சிந்திப்பது உன்னை அமரத்துவத்திற்கு, எல்லையற்ற நிலைக்கு இட்டுச் செல்லும். தீரனாக இரு! தைரியவானாக இரு! கல்லைப் போன்றே வலிவுள்ளவனாக இரு! கடவுள் சாட்சாத்காரம் பெற உனக்கு விருப்பமா? அப்படியானால், குழந்தாய், இந்த உடலைப் பேணி வளர்க்க அவகாசமில்லை. இதுதான் சரியான சமயம்; இப்போதுங்கூட உனக்கு ஒரு வாய்ப்பு இருக்கிறது. நீ உண்மைப்பொருளின் குழந்தை; உன் சுபாவம் சத்தியத்துவம் ஆகவே ஆத்மீக வாழ்க்கை என்ற ஜீவசக்தியுள்ள நீர்நிலைகளில் குதித்து மூழ்கிவிடு. அச்சமற்றிரு! வாழ்க்கையின்

இன்பங்களுக்கும் துன்பங்களுக்கும் மேலாக எழும்பிவிடக் கற்றுக்கொள்! நீ சுத்தான்மா என்பதை ஞாபகத்தில் இருத்து! நீ சுத்தான்மாவேதான் என்பதை ஞாபகத்தில் வைத்திரு!

ஆத்மிக வாழ்க்கை என்ற நீர்நிலையின் ஆழத்திற்கு — மிகமிக ஆழத்திற்குச் செல். அப்போது நீ வலிமைவாய்ந்தவன் என்பதைக் கண்டுகொள்வாய். உனது இயல்பான சுபாவமாகிய தெய்விகத்தின் அடித் தளத்திற்குச் சென்றுவிடு. ஆத்மானுபவம் பெறுவதற்கு நீ மேற்கொண்ட ஆன்மிகப் போராட்டத்தின் கபடமற்ற உண்மைத் தன்மையை அங்கே காண்பாய். அட! சில தோல்விகள் ஏற்பட்டுவிட்டால்தான் என்ன ஆகிவிடும்! பயமும் பலவீனமும் உடலைப் பற்றியவை மட்டுமே என்பதைத் தெரிந்து கொள். அவை உடலிலிருந்து அதாவது உடலாகிய இந்தக் கனவுக்கூட்டிலிருந்து எழுகின்றன; நீயோ உன்னுள் இருக்கும் உனது உண்மையான இயல்பில் நீ சுதந்திர மானவன், அச்சமற்றவன். குழந்தாய், வலிமை, வலிமை என்று ஆனந்தப் பாட்டுப் பாடு. என்றுமுள்ள அழிவற்ற பொருளின் குழந்தை நீ. நீ போய்ச் சேரவேண்டிய இடம் பரம் பொருள். நில்லாமல் ஓடி மறைகிற ஒரு நாளின் அனுபவங்களெல்லாம் பரந்த கனவின் தோற்றங்களைத் தவிர வேறென்ன? ஒன்று உலக வாழ்க்கையை தெய்வமயமாகப் பார்; அல்லது, அதை இல்லை என்று சாதித்துவிடு. தெய்வத்தன்மையை உணர்ந்துவிடு — இதை நீ எப்படிச் செய்தாலும் சரிதான்; வழி, உடன்பாட்டுமுறையாகவோ அல்லது எதிர் மறையாகவோ எப்படி இருந்தாலும் இரண்டும் ஒன்றுதான்.''

இந்த அருள் உபதேசத்தைக் கேட்டபின் என் ஆத்மாவில் ஓர் சாந்தி உதித்தது. நிகரற்ற ஓர் அத்தியந்த சாந்தநிலை எழுந்தது. அதன் நிச்சப்தத்தில், அசலமான அனந்த சக்தியின் எங்கும் ஊடுருவிப் பாய்ந்து நிற்கும் ஓர் சக்திக்கனல் திடீரென்று (உட்புலனாயிற்று) தன்னை வெளிப்படுத்திக்கொண்டது. என் ஆத்மாவுக்கு வலிமை தந்தது இந்த சக்தி. இந்த உணர்வு நிலையில் குருவின் குரல் என் காதுக்குக் கேட்கும்படி செய்யப்பட்டது. அது சொல்லிற்று: ''காலத்திற்கு அப்பால், ஏன் காலத்திற்குள்ளேயுங்கூட நான் எல்லை யற்றிருக்கிறேன்.'' உடலுடன் கூடியதோ, உடலற்றதோ எல்லாம் ஆத்மமயமே. இதயத்தில் எப்போதும் ஏகத்துவமே உள்ளது; இதயத்தில் எங்கும் சாந்தமே நிலவுகிறது. வெளிப்பரப்பில் வீசும் புயலுக்கு அடியாழத்தில்—நாநாவித நாமரூபபேதங்கள், சண்டை சச்சரவுகள், அலைகளுக்குக் கீழே — மிகமிக ஆழத்தில் பரம்பொருளின் உள்நீரோட்டம் உள்ளது.

தத் த்வமஸி? தத் த்வமஸி!



வறிய நிலையில் எவன் ஒரு பிடி தானியத்தில் பற்றுக்கொண்டு அதைப் பெற்றானோ, அவனே செல்வச் சிறப்புடையவனாக ஆகி விட்டால் பூதேவியைக்கூடப் புல்லுக்குச் சமமாக எண்ணுகிறான். ஒரு சாதாரணமான பொருள் கூட மனிதனுடைய ஒரு நிலையில் உயர்ந்ததாகத் தோன்றுகிறது; மற்றொரு நிலையில் உயர்ந்த பொருள்கூடத் தாழ்நிலை அடைகிறது. ஆகையால் மனிதனுடைய நிலையே ஒரு பொருள் உயர்வாகத் தோன்றவும் தாழ்ந்ததாகத் தோன்றவும் காரணமாகிறது.

—பர்த்ருஹரியின் நீதிசதகம்



வாங்கிய கடன்

நாடோடி

போஜராஜன் காலத்தில் ஒரு வியாபாரி இருந்தார். அவருக்கு வியாபாரத்தில் நஷ்டம் வந்துவிட்டது. அதற்காக வீடு வாசல் எல்லாவற்றையும் விற்றுக் கடன்காரர்களுக்குக் கொடுக்க வேண்டிய பணத்தைக் கொடுத்தார்.

ஆனால் அன்றாட ஜீவனத்துக்கு என்ன செய்வது? திரும்பவும் வியாபாரம் செய்தால்தான் பணம் கிடைக்கும். ஆனால் அதற்கு முதலுக்கு எங்கே போவது?

ஆகவே அவர் போஜராஜனைச் சந்தித்தார். ஒரு பெரும் தொகையைக் குறிப்பிட்டு, அதை அரசன் தமக்குக் கடனாகக் கொடுக்க வேண்டும் என்று கேட்டார்.

“வாங்கின கடனை எப்படித் திரும்பி அடைப்பீர்கள்?” என்று கேட்டான் அரசன்.

“இந்த ஜன்மத்தில் எவ்வளவு அடைக்க முடியுமோ அத்தனை அடைப்பேன். மீதியுள்ளதை அடுத்த ஜன்மத்தில் அடைப்பேன்” என்றார் வியாபாரி.

அரசன் உடனே தன் கஜானா அதிகாரியைக் கூப்பிட்டு, வியாபாரி கேட்ட பணத்தை கொடுக்கச் சொன்னான். வியாபாரி பத்திரம் எழுதிக் கொடுத்துப் பணத்தைப் பெற்றுக்கொண்டு வீடு திரும்பினார்.

வழியில் இரவு ஆகிவிட்டதால் ஒரு வாணியன் வீட்டில் தங்கினார். கையில் பணம் இருந்ததனால் இரவெல்லாம் அவர் தூங்கவேயில்லை.

வியாபாரிக்கு மிருகங்களின் பாஷை தெரியும். எனவே வாணியனின் இரண்டு உழவு மாடுகள் பேசிக்கொண்டதைக் கேட்டார்.

முதல் மாடு சொல்லிற்று: ‘போன ஜன்மத்தில் நான் இந்த வாணியனிடம் கடன் வாங்கியிருந்தேன். அந்தக் கடனை அடைப்பதற்காகத்

தான் இந்த மாட்டுஜன்மம் எடுத்து உழைத்து வருகிறேன். இன்னும் வயலில் மூன்று சுற்றுத்தான் பாக்கி இருக்கிறது. அதைச் சுற்றிவிட்டால் என் கடன் தீர்ந்துவிடும். நானும் இந்த மாட்டுஜன்மத்திலிருந்து விடுதலை அடைவேன்."

அதற்கு இரண்டாம் மாடு சொல்லிற்று: "நீ தேவலை; நாளையோடு உன் கடன் தீர்ந்துவிடுகிறது. ஆனால் எனக்கோ, நான் முன் ஜன்மத்தில் இந்த வியாபாரியிடம் வாங்கிய பணம் ஆயிரம் ரூபாய் இன்னும் பாக்கி இருக்கிறது. போஜராஜனின் ஒரு மாட்டுக்கும் எனக்கும் ஓட்டத்தில் போட்டிப் பந்தயம் வைத்தால் நான் நிச்சயமாகக் கெலிப்பேன். கெலிப்பவருக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டும் என்று வைத்துக் கொண்டால், வாணியனுக்கு என்மூலம் அயிரம் ரூபாய் கிடைக்கும்; நானும் இந்த மாட்டுஜன்மத்திலிருந்து விடுதலையடைவேன்."

வியாபாரி காலையில் புறப்பட வேண்டியவர், என்னதான் நடக்கிறது என்று பார்ப்பதற்காகச் சற்றுத் தாமதமாகவே புறப்பட்டார். முதல் மாடு மூன்று சுற்று வயலில் சுற்றியதுதான் தாமதம், கீழே விழுந்து இறந்தது.

உடனே வியாபாரி வாணியனிடம் நடந்தவிஷயங்களைச் சொன்னார். வாணியன் தன் மாட்டை அழைத்துக்கொண்டு போஜராஜனிடம் சென்றான். வியாபாரியும் கூடச் சென்றார்.

போட்டிப் பந்தயம் ஆயிரம் ரூபாய் என்று வைத்துக்கொண்டு, வாணியனுடைய மாட்டுக்கும் போஜராஜனுடைய மாட்டுக்கும் போட்டி நடந்தது. வாணியனின் மாடு வெகு வேகமாக ஓடிப் பந்தயத்தில் கெலித்தது. வாணியன் ஆயிரம் ரூபாயைப் போஜராஜனிடமிருந்து வாங்கியதுதான் தாமதம், வாணியனின் மாடு கீழே விழுந்து இறந்தது.

இதைப் பார்த்ததும் வியாபாரி தான் போஜராஜனிடமிருந்து கடனாக வாங்கிய பணத்தைத் திருப்பிக் கொடுத்தார்.

"இந்த ஜன்மத்தில் நான் கடனை அடைக்க முடியுமென்று தோன்றவில்லை. ஆகவே கடனை அடைப்பதற்காக நான் அடுத்த ஜன்மம் மாடாகப் பிறப்பானேன்? எங்கேயாவது கூலிவேலை செய்து பிழைத்துக் கொள்கிறேன்" என்று சொல்லி நடந்தார். □

புனிதமான கங்கையையும் சரஸ்வதி தேவியையும் வணங்குகிறேன். கங்கையில் குளித்தாலும் அதன் நீரைப் பருகினாலும் செய்த பாவம் விலகுகிறது. சரஸ்வதியை வேண்டினால் பாவம் செய்யத் தூண்டும் அவிவேகம் நீங்குகிறது.

— துளசி ராமாயணம்

ராமனின் பண்பு

நா. கிரிதாரி பிரசாத்



அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்பது தமிழ் மூதாட்டியின் வாக்கு. வேதமும் இதனையே வலியுறுத்துகிறது:— மாத்ருதேவோ பவ. பித்ருதேவோ பவ.

தாய் ஓர் தெய்வம், தந்தை ஓர் தெய்வம். ராமாயணத்தின் சிறப்பே தந்தையின் சொல்லைக் கேட்டுப் பதினான்கு ஆண்டுகள் காட்டிற்குச் சென்ற இராமனுடைய ஒழுக்கத்தில் அடங்கியிருக்கிறது. குமரேசர் சதகத்தின் ஆசிரியர் "தந்தை தாய் வாக்ய பரிபாலனம் செய்தவன் தசரத குமார இராமன்" என்று பாடுவார். மூலமும் நடுவும் ஈறும் இலாது ஓர் முழு முதற் பொருளாகக் காலத்தையும், கணக்கையும் நீத்து வந்த கருணாகரன், காலத்திற்கு வயப்பட்டுப் பதினான்கு ஆண்டுகள் காட்டில் தவம் செய்தான், இன்னலுற்றான், தன் திருவாட்டியையும் இழந்து ஒரு பாமரனைப் போல் பரிதவித்தான். இவை அனைத்தும் தந்தையின் ஆணையையும், தாயின் சொல்லையும் ஏற்று நடப்பதற்காகவே நிகழ்ந்தன.

காலசக்கரத்தில்தான் எத்தனை மாற்றங்கள், ஏமாற்றங்கள்! நாளை முடிசூட்டு வைபவம் என்று நாளிட்டு ஆயத்தங்கள் பலவும் முடிந்தபின் ஒரே இரவில் சரித்திரமே மாறி விட்டது. நாளை இளவரசுப் பட்டம் சூட்டப்பட இருந்த இராமன் கைகேயியின் சாகசத்தாலும், கூனியின் சூழ்ச்சியாலும் கானகம் சென்ற கதை ஓர் அழியாத சித்திரம். இரும்பினால் இயன்ற நெஞ்சினளாய கைகேயி இராமனைப் பார்த்து, கொன்று உழலும் கூற்றுவன் போன்று கொடுஞ்சொற்களைப் பேசினாள். "இன்று உனக்கு உணர்தல் ஆவது ஏயதேனின், ஆகும் ஒன்று உனக்கு உந்தை மைந்த! உரைப்பது ஓர் உரை உண்டு" என்றாள். இராமன் அடக்கமும் அமைதியும் நிரம்பியவனாய், "அம்மா! தந்தையே ஒன்று சொல்ல அதைத் தாயாகிய நீங்களே நேரில் எனக்கு ஆணையிட நான் எவ்வளவு தவம் செய்திருக்கவேண்டும்" என்று பணிவுடன் சொன்னான்.

இரக்கமற்ற கைகேயி, 'மன்னன் ஆணை இது' என இரண்டு கூற்றுக்களை இயம்பினாள். ஒன்று பரதனே நாட்டை ஆளவேண்டும், மற்றையது இராமன் கானகத்தில் பதினான்கு ஆண்டுகள் தவம் இயற்றிக் கானகத்தில் இருத்தல் வேண்டும். அவள் சொன்னதைக் கேட்ட பின்பும் இன்ப துன்பங்களை ஒன்றாகவே அனுபவிக்கும் இயல்பைப் பெற்ற இராமனின் உள்ளத்தில் மாற்றமோ பகையோ எழவில்லை.

அருங்குணத்து இராமன், கொற்ற வெண்குடையும் இன்றி. குழைக்கின்ற கவரி இன்றி, இழைக்கின்ற விதி முன்செல்ல, தருமம் பின் இரங்கி ஏங்க, தன் தாய் கோசலையை நோக்கிச் சென்றான். மகன் மஞ்சனப் புனித நீரால் நனைந்து வருவான் என்று நினைத்த அவளுக்கு அவன் வந்த காட்சி ஏமாற்றத்தைத்தான் தந்தது. மகனைப் பார்த்து, "நெடுமுடி புனைதற்கு நிகழ்ந்த இடையூறு யாது?' என்று வினவினாள்.

பின்பு அவளுக்கு விவரம் தெரிய வருகிறது. கபடமற்ற நெஞ்சினளாய கோசலை, தன் இளையாள் மகன் பரதனுக்கு அரசு என்று

அறிந்து அதை வாழ்த்தினுள். அவளது அந்தப் பண்பு ஓர் இந்தியத் தாயின் பண்பாட்டிற்கு ஒரு மேற்கோளாகத் திகழ்கிறது.

இலக்குவன் சீற்றம் மிக்கவன். அண்ணனையே தாயும், தந்தையுமாகப் போற்றி நிழல் போல் உடனிருந்து குற்றேவல் பூண்டவன். "கைகேயியின் சூழ்ச்சியால் இராமன் கானகம் செல்ல ஆணையிட்ட தந்தை தசரதனையும், வரம் பெற்ற அன்னையையும், சூழ்ச்சிக்குக் காரணமான பரதனையும் கொன்று குவிப்பேன்'' என அவன் வெகுண்டபோது இராமன் கூறிய மறுமொழி "இலக்குவணா! ஆற்றில் நீர் இல்லையானுல் அது ஆற்றின் குற்றமா? இல்லை. அதுபோல் நான் அரசைத் துறந்து காட்டுக்குச் செல்வது தந்தையின் குற்றமல்ல; தாய் கைகேயின் குற்றமும் அல்ல. தம்பி பரதனின் குற்றமும் அல்ல. இது விதியினுல் ஏற்பட்ட ஒன்று. இதற்கு நீ கோபமடைவது முறையா? தம்பி! ஒருகால் தந்தையே குற்றம் செய்திருந்தாலும் வேதங்களைப் படித்த நீ, தாய் தந்தையரைத் தெய்வம் எனப் போற்ற வேண்டிய நீ, அவர்கள் குற்றங்களைச் சொல்லலாமா? தந்தை தாய் என்றுல் அவர்கள் மேல் சலிக்கலாமா?' என்பதாகும். ○

விஷ்வக்சேனர்

விஷ்வக்சேனருக்குச் சேனை முதலியார் (படைத்தலைவர்) என்றும் பெயர் உண்டு. சேனை நாதன் என்றும் சொல்வார்கள்.

சிவபிரானுக்குச் சண்டேசுவரர் எப்படியோ, அதுபோல வைணவ சமயத்தில் திருமாலுக்கு விஷ்வக்சேனர் விளங்குகிறுர் எனலாம். சண்டேசுவரர் போலவே, இவர் பெருமாள் கோயிற் பணிகள் பலவற்றையும் மேற்பார்வையிட்டு ஆட்சி செய்வதுடன், பெருமாள் திருவுலா வரும்போது உடன் வருபவராவார்.

விஷ்வக்சேனர் என்னும் சொல்லுக்கு உலகமெங்கும் சேனைகளையுடையவர் என்பது பொருள். இவர் அனந்தன் கருடன் என்பவர்களைப்போல, நித்தியசூரிகளுள் ஒருவர் ஆவார். இவரே நம்மாழ்வாருக்குக் குரு என்றும், நம்மாழ்வாராக அவதரித்தவர் என்றும் கூறுவர்.

இவரது நிறம் கறுப்பு. தலையில் திருமுடி உண்டு. நான்கு கைகளுடன் இருப்பார். இரண்டு கைகளில் சங்கும் சக்கரமும் விளங்கும் ஏனைய இரண்டு கைகளில் கதாயுதமும் பிரம்பும் ஏந்தியிருப்பது உண்டு. சில திருவுருவங்களில் ஒரு கையில் வாளும், மற்றொரு கையில பிரம்பும் காணலாம். சிலவற்றில் இடக்கை இடுப்பில் இருக்க, வலக்கை அச்சுறுத்தும் அதிகாரதோரணையில் காணப்படும்.

வைணவச் சமயக்கொள்கையின்படி நாராயணனும்மகாலட்சுமியும் முறையே முதல் இரண்டாம் ஆசாரியர்களாக விளங்க, இவரே மூன்றும் ஆசாரியராகத் திகழ்கிறுர்.

பெருமாள்கோவில்களில் இவருக்கு வடகிழக்கு மூலையில் சந்நிதி அமைந்திருக்கும்.

இவரது திருநட்சத்திரம் ஐப்பசிப் பூராடம். சைவத்தில் விநாயகர்போல, வைஷ்ணவத்தில் இவரை எல்லாச் செயல்களுக்கும் தொடக்கத்தில் வணங்கி வழிபடுவார்கள்.

திருவரங்கம், பெருமாள்கோவில், திருமலை முதலிய தலங்களில் உள்ள கோவில்களில் பிரம்மோற்சவம் தொடங்குவதற்கு ஒரு நாள் முன்பு, இவரைத் திருவீதி எழுந்தருளச் செய்து வலம் வருவிப்பது வழக்கம். பிரம்மோற்சவப் பெருவிழாவில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செம்மையாகச் செய்யப்பட்டுள்ளனவா என்று, இவர் மேற்பார்வையிடுவதாக ஐதிகம்.

—ந ரா. முருகவேள்

தீண்டாமையும் ஹிந்துமதமும்

வி. தியாகராஜன்



சமீபகாலத்தில் ஹிந்துக்கள் ஒரு கிராமத்தில் இஸ்லாம் மதத்தைத் தழுவினர்கள் என்ற செய்தி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. கொஞ்சம் கொஞ்சமாகத் தினம் தினம் ஹிந்துக்கள் கிறிஸ்துவ மதத்திற்கு மாறிக்கொண்டே வருவது யாருக்கும் தெரிந்துகொள்ளமுடியவில்லை போலும்.

மதச்சார்பற்ற அரசாங்கம் என்று பெயர் வைத்துக்கொண்டு ஹிந்து மதத்தை அலட்சியம் செய்து வேறு மதத்தினரைக் கண்டு நடுநடுங்கி அவர்கள் என்ன செய்தாலும் மறுத்துப் பேசாதிருந்தவர்களுக்கும் இந்த மதமாற்ற விஷயத்தில் பெரும் பங்கும் பொறுப்பும் உண்டு என்பதை மறுக்க முடியாது. கிறிஸ்துவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் தங்கள் தங்கள் மதங்களைப் பிரசாரம் செய்வதற்கு இருந்த சௌகரியங்கள் ஹிந்துக்களுக்கு இல்லை. ஹிந்து மத ஸ்தாபனங்களைக் காப்பாற்றுகிறேன் என முதலைக் கண்ணீர் விட்டு எடுத்துக்கொண்ட அரசாங்கம் ஹிந்து மதத்திற்குச் செய்துவரும் துரோகம் சொல்லிமுடியாது.

ஹிந்து மதத்தை நன்கு பிரசாரம் செய்வதற்கும் மத இலக்கியங்களைப் பிரசாரம் செய்வதற்கும் யாரும் உதவி செய்யவில்லை என்பது மட்டுமன்று, எவ்வளவு இடைஞ்சல்கள் செய்யமுடியுமோ அவ்வளவும் செய்து வருகிறார்கள்.

ஹிந்து மதத்தின் பெருமையை அறிந்தவர்கள் மதம் மாறமாட்டார்கள். அவரவர் பிறந்த மதத்தை அவரவர் அனுசரிப்பதுதான் நேர்மை என்பது ஹிந்து மதக் கொள்கை. ஆப்பிள் ஆரஞ்சுப் பழமாக மாறி மீண்டும் ஆப்பிளாக மாறமுடியாது. அதுபோல் ஹிந்து ஹிந்துவே. ஏனையோரும் அவ்வாறே.

அராபிய நாடுகளில் வசிக்கும் ஹிந்துக்கள் ஹிந்து மதத்தைப்பற்றியே பேசக்கூடாது என்பது அங்கு வழக்கு. நாம் வருவோரையெல்லாம் வருக என்று வரவேற்று மரியாதை செய்து அவர்களால் புறக்கணிக்கப்படும் பெருமை பெற்றவர்கள்.

கடவுளே கிடையாது என்று வாதாடும் அன்பர்கள் ஹிந்துமதத்தைத்தான் தாக்கிப் பேசுவார்களே தவிர, பிற மதத்தைத் தாக்கினால் தங்களுக்கு ஆபத்து நேரும் என நன்கு உணர்ந்துள்ளனர். 'சாமியே கிடையாது, கல்லைத் தூக்கி எறி' என்று பேசக்கூடியவர்கள். 'சாமிக்கு ஏன் ஒரு சாதியார் பூசை செய்யவேண்டும்? தாழ்த்தப்பட்டவன் செய்தால் என்ன?' எனக் கேட்கிறார்கள். சாமியே இல்லை எனப் பேசுபவர்கள் பூசையைப்பற்றி ஏன் கவலைப் படுகிறார்கள் என்பதும் புரியவில்லை.

இவ்வளவும் போதாதென்று, மத நூல்களைப்பற்றித் தெய்வநம்பிக்கையுடன் பிரசாரம் செய்கிறேன் என்று உள்ள நண்பர்கள் அந்த அந்த மொழியில் தங்களுக்கு உள்ள ஆற்றலைக் காட்டவேண்டும் என்ற எண்ணத்துடன், நகைச்சுவை என்ற பெயரால் நம் தெய்விகக் காவியங்களுக்கு உள்ள பெருமை கெடும்படி பேசி வருகிறார்கள். நன்கு பயின்ற பெரியோர்கள் மறைந்து வாழ்கிறார்கள்,

ஹிந்து மதத்தில் உண்மையான பிரசாரகர்கள் மரியாதையின்றி நடத்தப்படுகிறார்கள். அவமரியாதை செய்பவர்களும் ஹிந்துக்களே. ஆங்கிலம் படித்துவிட்டாலோ ஆங்கில உடை

அணிந்துவிட்டாலோ நம் மதத்தின் மீது அருவருப்புக் கொள்வதும் அவமரியாதை செய்வதும் நாகரிகமாகிவிட்டன.

இன்றைய மதமாற்றத்திற்கு நம் மதத்தினர் பொறுப்பாளிகளல்ல. அரசியல் வாதிகளின் சுயநலம் இவ்வளவு விபரீதத்தில் கொண்டுவந்துவிட்டது என்பது கசப்பான உண்மை. இன்று திடீரென்று, ''ஹிந்து மதத்தை விட்டு மாறப்போகிறோம்'' என்று சில ஜனங்கள் கூறுவதும், ''அப்படிச் செய்யாதீர்கள், உங்களுக்கு வேண்டியதைச் செய்கிறோம்'' என்று அரசாங்க அதிகாரிகள் அங்கே ஓடுவதுமாகப் பத்திரிகைச் செய்தி வருகிறது. ஏன் இந்த அவல நிலை?

சுமார் 35 வருடங்களாகவே தவறு நடந்துள்ளது. உண்மையை உணர்ந்து செயற்பட்டால், நிலைமை சீரடைந்துவிடும். சீரடைய நம் அரசியல்வாதிகள் ஒப்புக் கொள்ளமாட்டார்கள் தீண்டாதார் பிரச்னை தீர்ந்துவிட்டால் அரசியல்வாதிகள் பிழைக்க முடியாது. எனவே என்றும் இந்த பிரச்னை வளர்ந்தால், ''நாங்கள் தாழ்த்தப்பட்டவர் களுக்காக உழைக்கிறோம்'' என்று எல்லாக் கட்சிகளும் பேசமுடியும்.

தாழ்த்தப்பட்டவர் என்று ஏன் பெயர் வைத்தார்கள்? தாழ்த்தப்பட்டவர்கள் என அழைக்கப்பெறுபவருக்குச் சலுகைகள் காட்டுவது காதிரி காட்டி, அவர்கள் என்றும் உயரமுடியாமல் சர்வ ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளப்படுகிறது.

தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கட்டப்படும் வீடுகள் அரிஜன காலனி என்பது போன்ற பெயரிடப்பட்டு, ஊருக்கு வெளியில் கட்டப் படுவானேன்? ஒருவேளை அறியாமையில் உழலும் அவர்கள் மற்ற ஹிந்துக்களுடன் பழகி, அரசியல்வாதிகளின் பிரித்தாளும் சூழ்ச்சியைப் புரிந்துகொண்டு, நாகரிக மடைந்துவிடுவார்கள் என்ற கவலையா?

சாதி ஹிந்துக்களை முற்போக்கானவர்கள் எனக்கூறி, அவர்களுக்குச் சலுகைகளை காட்டுவதாகக் கூறி, ''நீ 40 மார்க்குகள் வாங்கினால் போதும்; உன்னை உயர்த்தி விடுகிறோம்'' என ஆசை காட்டி, அவர்கள் அதிகமான அறிவு பெறாமல் நன்கு கவனமாகப் பாதுகாத்து, அறிவே நாட்டில் இல்லாத வண்ணம் செய்து, எல்லோரையும் முட்டாள் களாக்கி, அரசியல்வாதிகள் பிழைத்து வருகிறார்கள். பூனைக்கு யார் மணி காட்டுவது? இந்தத் தவற்றை யார் திருத்துவது?

தாழ்த்தப்பட்டவன் முன்னுக்கு வர வேண்டுமென்றால் அவனை மற்ற ஹிந்துக்களுடன் நன்கு பழக விட வேண்டும். படிப்பில் ஊக்கமுள்ளவர்களுக்கு அடிக்கடி பரிசுகள் கொடுத்து ஊக்குவித்து அவர்களைத் தேர்ச்சி பெறச் செய்யவேண்டும். ஒரு குழந்தை இளைத்துவிட்டால் அதற்கு நல்ல உணவு கொடுத்து ஆரோக்கியம் பெறச் செய்ய வேண்டுமே தவிர, சிறிது பலமாக உள்ள குழந்தையைப் பட்டினி போட்டால் இரண்டு குழந்தைகளுமே இளைத்துவிடும். அறிவு விஷயமும் இப்படியே.

தாழ்த்தப்பட்டவர்களுக்கு நல்ல கல்வி யறிவு பெற வசதி செய்யுங்கள். நல்ல கல்வியறிவு பெற்றால் அவர்கள் நல்ல பதவி களுக்கு வர வாய்ப்புகள் கிடைக்கும். நம் மதம் எப்பேர்ப்பட்டது என்பதை உணர்ந்து மாறாதிருப்பார்கள். கிறிஸ்துவ அன்பர்களும் இஸ்லாமிய அன்பர்களும் தத்தம் மதங்களை அறியவேண்டும் என்பதற்காக நிறையக் கல்வியைப் பரப்புவதைப் பார்த்து நாமும் அவ்வாறு செய்ய வேண்டும். அதிகக் கல்வி யறிவு அளிக்காமல் சிலரைத் தாழவிட்டு, அறியாமை காரணமாக, வேறு மதம் செல்லுபவர்களைப் பார்த்து வெறுங்கூச்சல் போடுவதனால் என்ன பயன்? கல்வியைப் பரப்புக. ஹிந்துமதம் தானே வாழும். எல்லோரும் முயன்றால் ஹிந்துமதம் சிறப்படையும். □

தேவியின் திருவருள்

எஸ். சீதா

பிரசித்தி பெற்ற ஒரு மகான் வித்யாரண்யர். அத்வைத ஆசார்யர்களில் இரண்டாவது சங்கரர் என்று அவர் போற்றப்படுகிருர்.

சந்நியாசம் ஏற்றுக்கொள்வதற்கு முன்பு பூர்வாசிரமத்தில் வித்யாரண்யர் ஏழைப் பிரம்மசாரியாக இருந்தார் ஆ வே அப்போது அவர் குடும்பத்தின் வறுமை நிலே மாற மகாலட்சுமியை நோக்கிக் கடுந்தவம் இயற்றிஞர்.

அவரது தவத்திஞல் மகிழ்ந்த திருமகள் அவருக்கு ஒரு ஞானக்காட்சியை அருளிஞள். அதில் அவள், 'உனது கர்ம விதியின்படி இந்தப் பிறவியில் நீ பெருஞ் செல்வத்தைப்பெறுவதற்கில்லே? அடுத்தப் பிறவியில் நீஎனது திருவருளால் பெருஞ் செல்வத்தைப் பெறுவாய்'' என்று கூறி மறைந்துவிட்டாள்.

புத்திசாதுர்யம் மிக்க வித்யாரண்யர் உடனே சந்நியாசம் மேற்கொண்டுவிட்டார். ஏனென்ருல் அது மறுபிறவிக்குச் சமமாகும் அல்லவா?

இப்போது மகாலட்சுமியிடம் அவர் செல்வத்தைப் பிரார்த்திக்கவும், தேவி தங்கமாகக் கொட்டி அருளிவிட்டாள்.

தம்மைச் சுற்றிலும் கண்ணுக்கெட்டிய வரை இருந்த பொன்னேக் கண்டதும் அவரது மனதில் வருத்தமே ஏற்பட்டது 'குடும்பத்தின் வறுமை தீரச் செல்வத்தைக் கேட்டேன். இப்போது சந்நியாசம் பெற்ற பின்பு எனக்குக் குடும்பம் ஏது?' என்று நினேந்துக்கொண்டார்.

ஆனல் ஏதோ ஒரு சங்கல்பம் காரணமாகவே அம்பாள் தம்மை இப்படிச் சோதித்திருக்கிருள் என்று வித்யாரண்யர் புரிந்துகொண்டார். திருமகள் அருளிய அவ்வளவு செல்வத்தைக் கொண்டு ஒரு பேரரசையே ஸ்தாபிக்க முடியும் என்பதையும் உணர்ந்தார்.

ஜோதிட சாஸ்திரத்திலும் மிகுந்த பாண்டித்யம் பெற்றிருந்ததஞல் உன்னதமான ஒரு ஹிந்து சாம்ராஜ்யம் ஸ்தாபிக்கும் புண்ணிய நேரம் நெருங்கிவிட்டதை வித்யாரண்யர் தெரிந்துகொண்டார். அந்தச் சமயத்தில் ஆடு மேய்த்துக்கொண்டிருந்த இரண்டு சிறுவர்களேக் கண்டதும் அவர்களே நாட்டை




ஆளப் பிறந்தவர்கள் என்பது அவருக்குப் புரிந்தது துங்கபத்திரை நதிக்கரையில் ஹம்பி என்ற இடத்தில் ஹரிஹரர் புக்கர் என்ற இருவருக்கும் வித்யாரண்யர் ராஜ்ய பட்டாபிஷேகம் செய்து வைத்தார்.

அந்தக் காலத்தில் பலமான ஹிந்து ராஜ்யம் எதுவும் எதிர்க்க இல்லேயாதலால் துணிவு கொண்ட முகம்மதிய வெறியனன மாலிக்காபூர், புண்ணிய புருஷர்களாலும், தர்ம எண்ணம் கொண்ட மன்னர்களாலும் கட்டப்பட்டு, கோடிக்கணக்கான ஹிந்துக்களுக்கு ஆத்மசாந்தி அளித்துவந்த தெய்வத் திருக்கோயில்களே இடித்துப் பாழ் செய்துகொண்டு ராமேசுவரம் வரை சென்றுவிட்டான்.

ஸ்ரீ வித்யாரண்யர் கம்பன்ன உடையார் என்ற பேராற்றல் மிக்கவரை விஜயநகர சாம்ராஜ்யத்தின் தளபதியாக்கி, துருக்கர்களே எதிர்த்து நம் ஹிந்துதர்மத்தைக்காக் அனுப்பி வைத்தார். கம்பன்ன உடையார் ஐந்து இடங்களில் துருக்கர்களுடன் போரிட்டார். மதுரையில் நடைபெற்ற யுத்தத்தில் முகம்மதியப் படை படுதோல்வியுற்றுத் திரும்பியது கம்பன்ன உடையாரால் பல கோயில்கள் காக்கப் பெற்றுத் திருப்பணியும் செய்யப் பெற்றது.

தமது பிற்கால வாழ்க்கையில் சிருங்கேரி சங்கரபீடத்தின் ஜகத்குருவாக வித்யாரண்யர் விளங்கிஞர். அவர் நான்கு வேதங்களுக்கும் பாஷ்யம் இயற்றியுள்ளார். அது தவிர ஜோதிட சாஸ்திரம், அர்த்த சாஸ்திரம், தர்ம சாஸ்திரம், வைத்திய சாஸ்திரம் ஆகியவை குறித்தும் நூல்கள் எழுதியுள்ளார். □



மாயை என்றால் என்ன?

டி. கே. நாராயணன்

'மாயை'—இது நம் அனைவருக்கும் மிகவும் தெரிந்த வார்த்தைதான். ஆனால் அதன் உட்பொருளைத் தெரிந்துகொண்டவர்களின் எண்ணிக்கைதான் மிக மிகக் குறைவு நமது அன்றாடப் பேச்சு வழக்கில் நாம் தெரிந்தோ, தெரியாமலோ, 'எல்லாம் மாயை', 'மாயை என்னை மயக்கிவிட்டது', 'மாயைக்கு வசப்படாதார் யார்?' என்பன போன்ற வாக்கியங்களைப் பயன்படுத்துகிறோம் இல்லையா? இந்த 'மாயை' எத்தகையது, அது எப்படி அனைவரையும் தன் பிடிக்குள் சிக்க வைக்கிறது என்பதைப்பற்றிக் கொஞ்சம் நாம் சிந்திக்கத் தலைப்பட்டால் எத்தனை எத்தனையோ உண்மைகள் நமக்குத் தெரியவரும்.

சம்ஸ்கிருத வார்த்தையான இது 'மாயா' என்ற பெண்பால் சொல்லாக அமைந்திருக்கிறது.

மாயைக்கு அதாவது 'மாயா' என்ற வார்த்தைக்குப் பலர் பலவிதமாக விளக்கம் கூறுவர். 'மாயா' என்ற வார்த்தையிலேயே அதன் பொருள் அடங்கியிருக்கிறது என்பார் ஒருவர். எப்படி? 'யா மா ஸா மாயா'—எந்த ஒன்று உண்மையில் இல்லையோ அதை இருப்பதாகக் காட்டுவதே மாயை.

எந்த ஒன்று சற்று முன்பு இருந்தது போன்று இப்பொழுது இருப்பதில்லையோ அது மாயை.

மாயை எத்தகையது என்பதை பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் கீழ்வருமாறு விளக்குகிறார்—

"நீரின் மீது படர்ந்திருக்கும் பாசி போன்றது மாயை. பாசியைக் கொஞ்சம் அப்புறப்படுத்தியதும் நீ தென்படுகிறது. ஆனால் மீண்டும் வந்து பாசி அதை மூடிக்கொள்கிறது. சத்சங்கம் செய்யும்பொழுதும் ஞான விசாரம் செய்யும்பொழுதும் மெய்ப்பொருளைப்பற்றிய உணர்வு தெளிவாக உள்ளத்தில் இருக்கிறது. ஆனால் மீண்டும் உலக ஆசை என்னும் மாயை வந்து அந்தத் தெளிந்த உணர்வை மறைத்து வருகிறது."

பல விதங்களில் 'மாயா' என்ற வார்த்தைக்கு விளக்கம் கூறலாம். ஆனாலும் மாயையின் மகிமைபற்றி ஆதிசங்கரர் தமது 'சதச்லோகீ'யில் கூறுவதை நாம் காண்போம். அந்த விளக்கம் மற்ற விளக்கங்களின் சாரமாக அமைகிறது.

ஸ்ரீசங்கரர் மாயைக்கு முக்கியமான நான்கு மகிமைகள் இருப்பதாகக் கூறுகிறார்—

1. ஈசுவரன் அநாதி அதாவது ஆதியில்லாதவன். அதுபோல மாயையும் அநாதியானது. இருப்பினும் அதற்குக் கிழட்டுத்தனமே கிடையாது. அது யாண்டும் இளமையுடன் மிளிர்ந்து கொண்டிருக்கிறது. பார்க்கப் பார்க்கப் புதியது போலவே அது தோன்றிக் கொண்டிருக்கும். அதாவது ஓர் அனுபவம் திரும்பத் திரும்ப ஏற்பட்டாலும் அதில் நமக்கு வெறுப்பே உண்டாகாது. அதுதான் மாயையின் மகிமையாகும்.

2. பொதுவாக, 'இது சாத்தியமில்லை. இது முடியாது' என்று நாம் எதையெல்லாம் சாதாரணமாக நினைக்கிறோமோ அதையெல்லாம் செய்து காட்டும் வல்லமை மாயைக்கு உண்டு. அதாவது முடியாததை 'முடியும்' என்று ஆக்கிக்காட்ட வல்ல வல்லமை அது.

3. மாயை மிகவும் கவர்ச்சிகரமானது என்பதால் நமது மனதை முதலில் சுண்டி இழுக்

கும். நாம் அதிலிருந்து விடுபட நினைத்தால் கூடப் பல்வேறு வழிகளில் நமது மனதைத் தன்னிடம் ஈர்க்கும் அற்புதமான சக்தி அதனிடம் உண்டு. அது நம்மை ஏமாற்றிப் படுகுழியில் தள்ளிவிட்டது என்ற உணர்வு நமக்குப் பின்புதான் ஏற்படும்.

4. மாயைக்கு உள்ள ஆற்றல் மிகவும் முக்கியமானது. வேத சாஸ்திரங்களை நன்கு கற்றுத் தேர்ச்சியடைந்திருப்பவர்களைக் கூட மாயை மயக்கி, அவற்றில் சொல்லியிருக்கிற விஷயங்களை இவன் சரியாக அர்த்தம் செய்து கொள்ளாமலோ மறந்துவிடும்படியோ திரித்துக் கூறும்படியோ செய்துவிடும்.

இந்தக் கருத்துக்களைக் கொண்ட சதச்லோகி ச்லோகம் வருமாறு:—

சத்வாரோ அஸ்யா: கபர்தா:
யுவதிரத பவேந்நூதநா நித்யமேஷா,
மாயா வா பேசலா ஸ்யாத்
அகடநகடநா பாடவம் யாதி யஸ்மாத் |
ஸ்யாதாரம்பே க்ருதாஸ்யா ச்ருதிபவ
வயுநாந்யேவமாச்சாதயந்தீ
தஸ்யாமேதௌ ஸுபர்ணாவிவ
பரபுருஷௌ திஷ்டதோ
அர்த்தப்ரதீத்யா ||

'இந்த மாயைக்கு நான்கு மகிமைகள் உள்ளன. இந்த மாயை நித்திய யௌவனமுள்ளது. அதனால் எப்பொழுதும் புதிதாகவே இருக்கும். 2. முடியாததை முடித்து வைப்பதில் இது மிகவும் திறமையுடன் கூடியதாக இருக்கும். 3. ஆரம்பத்தில் நெய்யை உடைய வாயுள்ளதாகவும் (மிகவும் மனோகரமானதாக) இருக்கும். 4. வேதத்தில் உள்ளவனவற்றை நன்கு மறைப்பதாகவும் இருக்கும். ஈசுவரனும் ஜீவனும் இரு பறவைகளுடன் ஒப்பிடப்படுவது முண்டகோபநிஷதத்தில் வரும் உதாரணத்தைப் போல அமைந்திருக்கிறது. ஜீவன், ஈசுவரன் ஆகிய இருவருமே மாயையுடன் தொடர்பு உடையவர்களாக இருக்கிறார்கள். ஆனால் ஜீவன் மாயைக்கு வசப்பட்டது. ஈசுவரனுக்கு மாயை வசப்பட்டது. இதுதான் இருவருக்குமிடையேயுள்ள வேறுபாடு. வெறும் சாட்சியாகப் பார்த்துக் கொண்டு இருப்பவன் ஈசுவரன். அதில் ஈடுபட்டுச் சுகதுக்கங்களை அனுபவிப்பவன் ஜீவன்.

நமது நடைமுறை வாழ்வில் நாம் எவ்வாறு இந்த மாயைக்கு உட்பட்டிருக்கிறோம் என்பதைக் கொஞ்சம் ஆராய்ந்தால் நன்கு விளங்கும். பயங்கர வேகத்துடன் கரை புரண்டு மரங்களையும் பாறைகளையும் உருட்டிக் கொண்டு ஓடும் காட்டாற்று வெள்ளத்தை எதிர்த்து நீச்சல் போடுவது எவ்வளவு சிரமமோ அதைவிடப் பன்மடங்கு அதிகம் சிரமமானது மாயையின் சக்தியை எதிர்த்துப் போராடுவதாகும். ஆனால் இது சிரமமானதே தவிர முடியாதது அல்ல.

நமது உடலை நாம் எவ்வளவு பிரியத்துடன் நேசிக்கிறோம்! முடியழகு, கண்ணழகு, மூக்கழகு, பல்லழகு, உதட்டழகு இப்படி உடலில் அங்கம் அங்கமாகப் பார்த்துக் கண்ணாடியின் முன் நின்று மணிக்கணக்காக உடலை அலங்கரிப்பதில் செலவிடுகிறோமே. இந்தத் தலைமுடி தலையை விட்டுப் பிரிந்து தனியாகக் கிடந்தால் நாம் அதை ரசிப்போமா? மாட்டோம். அல்லது உண்ணும் உணவில் இந்தத் தலைமுடி தவறுதலாகக் கிடந்தால் அது நமக்கு எவ்வளவு எரிச்சலை உண்டாக்குகிறது! அப்படியாயின் நாம் உண்மையில் அந்த முடியை நேசிக்கவில்லை. அது மட்டுமல்ல, கறுத்த முடி வெளுத்துவிட்டாலும் நமது ரசனை மாறி விடுகிறது. இந்த நிலை நமது உடலிலுள்ள ஏனைய உறுப்புக்களுக்கும் பொருந்தும்.

இன்னும் கொஞ்சம் ஆழ்ந்து சிந்தித்தால் இந்த நமது உடல் ஒரு மலக்குழி, வியாதிகளின் இருப்பிடம் என்பது புலனாகும். எவ்வளவுதான் போஷித்துப் பாதுகாத்தாலும் வயது ஆக ஆகக் கண்பார்வை குறைகிறது, தலைமுடி நரைக்கிறது, உதிர்கிறது, பல் விழுகிறது, தோல் சுருங்குகிறது, மூட்டுக்கள் வலிக்கின்றன. இப்படி அடுக்கிக்கொண்டே போகலாம். இவ்வளவும் தெரிந்தும் வயதா

கித் தள்ளாத காலத்திலும் கூட உடல் மீது நமக்குள்ள மோகம் குறைவதில்லையே! அது எதனால்? எல்லாம் இந்த 'மாயை'யினால்.

இந்த மாயையை வெல்ல முடியுமா? முடியும். எப்படி? வைராக்கியத்தையும் விவேகத்தையும் வளர்ப்பதுடன், 'இறைவா! நீயே இந்த மாயையின் பிறப்பிடம். தயவு செய்து இதன் பிடியிலிருந்து என்னைக் காத்து அருள்வாய். மாயையின் பிடியில் நான் இதுகாறும் பட்டதெல்லாம் போதும். அது எனது அற்புதக் கண்ணை மறைக்கிறது. அருள்கூர்ந்து என்மீது கருணை காட்டு. உன் அருள் இருந்தால் எதுவும் முடியும். மாயையின் பிடியிலிருந்து என்னை விடுவித்தருள், இறைவா!' என்று மனப்பூர்வமாகப் பிரார்த்தித்து இறையருளை நாடுவதனால் மாயையை வெல்ல முடியும்.

இந்த இடத்தில் மற்றொன்றும் கூறவேண்டியது அவசியமாகிறது. மாயைக்கு வசப்பட்டிருப்பதனால்தானே நம்மால் இந்த உலக வாழ்க்கையை நடத்த முடிகிறது? குடும்பத்தில் இருக்கும் நாம் மாயையின் பிடியிலிருந்து விடுபட்டுவிட்டோம் என்று வைத்துக்கொள்வோம். அப்பொழுது எங்கும் ஓடத் தேவையில்லை, எதையும் துறக்கவேண்டிய அவசியமில்லை. தாமரையிலைத் தண்ணீர்போல ஜகத்தோடு கூடி வாழ்கின்ற தன்மை நமக்கு அப்பொழுது வந்துவிடும். வீட்டில் இருந்தும் காட்டில் வாழும் துறவியைப் போன்ற நிலையில் நாம் இருப்போம். அது பெறற்கரிய பெருநிலை. அதுவே உண்மையில் பற்றற்ற பெருநிலை. அதுவே மிகச் சிறந்த நிலை. உலகில் நாம் இருந்தாலும் நமது மனம் உலகத்துப் பொருள்களில் ஒட்டிக்கொள்ளாது. அந்த நிலையே ஜீவன் முக்தி எனப்படுகிறது.

இந்த மிகப் பெரிய நிலையை, பந்தத்தில் உழலும் நம்மால் அடைய முடியுமா என்ற ஐயம் பிறக்கும். அதை அடைகிறோமோ இல்லையோ, அத்தகைய நிலையை அடைய வேண்டும் என்ற விருப்பத்தையாவது நாம் பெற்று விளங்குவது போற்றற்குரியதாகும். இடைவிடாமல் முயன்று வந்தால் துன்பம் குறைவதைக் காணலாம் முடிவில் "எந்நாளும் துன்பமில்லை" என்ற நிலையையும் அடையலாம். □



சொல்லும் அதன் பொருளும் போல் இணை பிரியாமல் நிற்பவர்கள் சீதையும் ராமனும். நீரும் அதில் எழும் அலையும் போல் பெயரினால் மட்டும் வேறுபட்டு உண்மையில் ஒன்றாக நிற்பவர்கள் ராமனும் சீதையும். இவர்களின் திருவடியைப் போற்றுகிறேன். ராமனும் சீதையும் துக்கப்படுவோர்மீது இரக்கம் கொண்டவர்கள்.

அக்கினி, சூரியன், சந்திரன் தோன்றக் காரணமாக அமைந்த ராமன் பெயரைத் தொழுகிறேன். ராமநாமம் பிரம்மா விஷ்ணு சிவமயமானது; வேதத்தின் உயிர் நாடி போன்றது; நிர்க்குணமானது; உவமையற்றது; குணக் களஞ்சியமானது.

—துளசி ராமாயணம்

அருள்நெறிக் கதை

நாடோடி

மன்னனின் மாண்பு

மகாராஜா சத்ரஸால் மன்மதனைப்போல் அத்தனை அழகாக இருப்பார். அவரைக் கண்டால் எந்த ஸ்திரீயும் மோகித்து விழுவாள்.

சத்ரஸால் பிரஜைகளின் குறைகளை நேரில் தெரிந்துகொள்வதற்காக அடிக்கடி நகரைச் சுற்றி வருவது வழக்கம். அப்படிச் சுற்றி வந்தபோது ஒரு தெருவில் ஓர் அழகி அவரைக் கண்டு மோகித்துவிட்டாள். ஆனால் மகாராஜாவோ, பிற ஸ்திரீகளைக் கண்ணெடுத்தும் பார்க்காதவர்.

ஒரு தடவை அவர் அவள் இருந்த தெருவின் வழியாகப் போய்க்கொண்டிருக்கையில், அவள் தன் வீட்டிலிருந்து வெளிப்பட்டு, மகாராஜாவைப் பார்த்து, ''நான் மிகவும் மனது உடைந்திருக்கிறேன்'' என்று சொன்னாள்.

அரசர் அவளை நிமிர்ந்து பார்க்காமல் தரையைப் பார்த்தவண்ணம், ''உங்களுக்கு என்ன கஷ்டம்? என்னால் உதவக்கூடுமானல் சொல்லுங்கள்'' என்ருர்.

''எனக்குக் குழந்தைகளே இல்லை. என் கணவர் இது விஷயத்தில் அசமர்த்தராக இருக்கிருர். தங்களைப் போன்ற ஒரு பிள்ளை எனக்கு வேண்டும்'' என்று அவள் சொன்ஞள்.

அவளுடைய எண்ணத்தை அரசர் புரிந்துகொண்டார். ஆனாலும் தம் மனதைப் பறிகொடுப்பவர் மகாராஜா சத்ரஸால் அல்லவே!

ஆகவே அவள்முன் தலைகுனிந்து, ''அம்மா! இன்றுமுதல் என்னையே தங்கள் மகனாகக் கருதுங்கள். தாங்கள்தான் இனி ராஜமாதா'' என்ருர்.

பக்த ஹரிதாஸ்

பக்த ஹரிதாஸ் வங்காளத்தைச் சேர்ந்த ஒரு முஸ்லிம் வீட்டில் பிறந்தும், பூர்வஜன்ம வாசனையின் பயனாகச் சிறந்த ஹரிபக்தரானார். அவர் தினம் மூன்று லட்சம் தடவை ஹரி நாமத்தை ஜபிப்பது வழக்கம். அவர் சைதன்ய மகாப்பிரபுவைவிடப் பதினைந்து இருபது வருடம் வயதில் பெரியவர். இருந்தும் அவர் தம்மைச் சைதன்யரின் சீடராகவே மதித்தார்.

ஹரிதாஸின் புலனடக்கத்தைக் கண்டு பொருமை கொண்ட ஜமீன்தார் ஒருவர் அவரைக் கெடுக்க எண்ணி ஒரு நாள் இரவு ஒரு தாசியை அவர் குடியிருந்த இடத்திற்கு அனுப்பி வைத்தார்.



தாசி சென்ற சமயம் ஹரிதாஸ் ஹரிநாம ஜபத்தில் ஈடுபட்டிருந்தார். ஆகவே அவர் அவளைக் கவனிக்கவேயில்லை. இரவு முழுவதும் ஜபத்திலேயே ஈடுபட்டிருந்த அவர் மனதைத் தன் பக்கம் இழுக்க அந்தத் தாசி என்ன என்னவோ சேஷ்டைகள் செய்து பார்த்தாள். ஒன்றும் பலனில்லை.

பொழுது விடிந்ததும் ஹரிதாஸ் வேசியைப் பார்த்தார். "அம்மா! நான் ராம ஜபம் செய்துகொண்டிருந்ததனுல் உன்னைக் கவனிக்க முடியவில்லை. என்னை மன்னிக்க வேண்டும்'' என்ருர்.

தாசி போய்விட்டு அன்றைய ராத்திரி திரும்பி வந்தாள். அன்றும் ஹரிதாஸ் ராம ஜபத்திலேயே ஈடுபட்டிருந்தார். பொழுது விடிந்ததும், "அம்மா! நான் ராமஜபத்தில் ஈடுபட்டிருந்ததனுல் உன்னைக் கவனிக்கவே முடியவில்லை; மன்னிக்க வேண்டும்'' என்ருர்.

இப்படி நான்கு தினங்கள் சென்றன. ஆனுல் நான்கு தினங்களாக, புலனடக்கமுள்ள ஒருவரைப் பார்த்துக்கொண்டும், அவரது ராம ஜபத்தைக் கேட்டுக்கொண்டும் இருந்ததனுல் வேசியின் மனம் மாறிவிட்டது.

'எத்தனை பெரிய உத்தமரை நாம் கெடுக்க இருந்தோம்!' என்று அவள் பச்சாத்தாபப்பட்டதுடன் தன் தொழிலையும் நொந்து கொண்டாள்.

ஐந்தாம் நாள் காலை அவள் ஹரிதாஸரின் காலில் விழுந்து வணங்கி, "இந்தப் பாவி கடைத்தேறுவதற்கு ஏதாவது வழி சொல்ல வேண்டும்'' என்று கேட்டாள்.

ஹரிதாஸ் அவள் கையில் ஒரு மாலையைக் கொடுத்து ஹரிநாமத்தை ஜபிக்கச் சொல்லி விட்டு அந்த ஊரைவிட்டே அகன்ருர்.

அவரது புலனடக்கத்தினுல், அவரைக் கெடுக்க வந்த தாசி பெரிய பக்தையானுள்.

பறக்க முடியவில்லை!

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மகத நாட்டில் மாஷி நதிக்கரையில் இருந்த ஒரு காட்டில் ஒரு தபஸ்வி இருந்தார். அவர் பெயர் உக்கிர ராமபுத்திரன் என்பது. அவர் தமது தவவலிமையினுல் பறக்கும் சித்தியைப் பெற்றிருந்தார்.

எனவே அவர் தினமும் பகல் பன்னிரண்டு மணிக்கு மகதநாட்டு அரசனின் அரண்மனைக்குப் பறந்துவருவார். அரசன் கொடுக்கும் பிக்ஷையை ஏற்றுப்பிறகு பறந்து தம் இருப்பிடம் செல்வார்.

ஒரு நாள் அரசனுக்கு அவர் வரும் சமயம் பார்த்து அவசர காரியமாக வெளியே செல்ல வேண்டியிருந்தது. அதனுல் தபஸ்வியை வரவேற்று உபசரிக்கும் பணியை ஒரு வேலைக்காரிப் பெண்ணிடம் ஒப்படைத்துவிட்டு, அவன் ரதத்தில் ஏறி வேகமாகச் சென்ருன்.

சிறிது நேரத்திற்கெல்லாம் தபஸ்வி அரண்மனைக்குப் பறந்து வந்தார்.

"வாருங்கள் மகராஜ்!'' என்று அந்தப் பெண் அவரை வரவேற்ருள்.

பெண்ணைப் பார்த்ததும் தபஸ்வி, 'எத்தனை அழகாக இருக்கிருள்! இவளுடைய அங்கங்கள்தாம் எத்தனை லாவண்யமாக விளங்குகின்றன! இவளுடைய குரல்தான் எத்தனை மதுரமாக இருக்கிறது!' என்று ஒரு கணம் நினைத்தார்.

வேலைக்காரி அவருக்கு உணவு வகைகளைப் பரிமாறினுள். அவர் சாப்பிட்டார்.

சாப்பிட்டபிறகு திரும்பியபோது, வழக்கம்போல் பறந்து செல்ல விரும்பினுர். ஆனுல் அவரால் முடியவில்லை. அந்த ஒரு கணம் அந்தப் பெண்ணின் அழகில் ஈடுபட்டுவிட்டதனுல் அவருடைய தவவலிமை குறைந்து போயிற்று.

தபஸ்விக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. கடைசியில் நிலைமையை ஒருவாறு சமாளிப்பதற்காக, "இன்று தபஸ்வி பறந்து செல்லமாட்டார். நகர மக்களுக்குத் தரிசனம் கொடுக்கப்போகிருர்'' என்று அறிவிக்கச் சொன்னுர்.

அதற்குப் பிறகு அந்தத் தபஸ்வியால் பறக்கவே முடியவில்லை.


ஒன்று போதும்!

ஓர் ஊரில் ஒரு பெரிய அழகிய குளம் இருந்தது. ஆனுல் அந்த ஊர், துஷ்டர்கள் நிறைந்தது. ஆகவே அவர்கள் குளத்தின் ஒரு முனையில் வேசிகளின் விடுதிகள் சில கட்டினர். இன்னொரு முனையில் மாமிசம் விற்கும் கடை

கள் அமைத்தனர். மூன்றாவது மூலையில் மது பானங்கள் விற்கும் கடைகளை அமைத்தனர். நான்காவது முனையில் சூதாட்டங்கள் விளையாடும் சில கட்டிடங்களை அமைத்தனர்.

ஒரு நாள் ஒரு நல்லவர் அந்த ஊருக்கு வந்தார். அந்தத் துஷ்டர்கள் அவரை அந்த அழகிய குளத்தைச் சுற்றிப் பார்க்க அழைத்துச் சென்றார்கள்.

முதலில் அவர்கள் வேசிகளின் விடுதிகள் இருந்த பக்கத்திற்கு அவரை அழைத்துச் சென்றார்கள். வேசிகளின் விடுதிகளைக் கண்டதும் அந்த நல்லவருக்கு மிகுந்த கோபம் வந்தது. "இந்த நல்ல குளக்கரையில் இப்படி வேசிகளின் விடுதிகளைக் கட்டி வைத்திருக்கிறீர்களே" என்று வருத்தப்பட்டார்.



பிறகு அவர்கள் அவரை மாமிசக் கடைகள் இருந்த இடத்திற்கு அழைத்துச் சென்றனர். அதைக் கண்டதும் அந்த நல்லவர் வருத்தப்பட்டார். "நல்ல கறிகாய்கள் இருக்க, இந்த நாற்ற மாமிசத்தைச் சாப்பிடுவானேன்?" என்று கேட்டார்.

பிறகு அவர்கள் அவரை மதுபானக் கடைகள் இருந்த இடத்திற்கு அழைத்துச் சென்றனர். அதைக் கண்டதும் நாற்றம் சகிக்காமல் அவர் மூக்கை மூடிக்கொண்டார். "இப்படி எதற்காக மதுபானக் கடைகளை வைத்து மக்களைக் கெடுக்கிறீர்கள்!" என்று கேட்டார்.

கடைசியாக அவர்கள் அவரைச் சூதாட்ட விடுதிகள் இருந்த பகுதிக்கு அழைத்துச் சென்றனர். அதைக் கண்டதும், "இது பரவாயில்லை, மக்கள் உல்லாசமாகப் பொழுது போக்க இந்தச் சூதாட்டங்கள் மிகவும் பயன்படும். ஆனால் அதிகப் பணம் வைத்து ஆடக் கூடாது. கொஞ்சமாகப் பணம் வைத்து ஆடினால் பரவாயில்லை" என்று சொல்லிவிட்டு அவரே அங்கு உட்கார்ந்து ஆட ஆரம்பித்தார்.

அவர் கொஞ்சமாகப் பணம் வைத்துத் தான் ஆடினார். முதலில் ஜயிக்க ஆரம்பிக்கவே பிறகு நிறையப் பணம் வைத்து ஆட ஆரம்பித்துவிட்டார். ஆனால் நிறையப் பணம் வைத்து ஆடவே தோற்க ஆரம்பித்தார். அவரது உற்சாகம் குறைந்தது.

"உற்சாகத்தோடு ஆடினால் நிச்சயமாக ஜயிப்பேன். ஆகவே உற்சாகம் ஏற்படச் சிறிது மதுபானம் இருந்தால் தேவலை" என்று மதுபானங்களை வரவழைத்துக் குடித்தார்.

குடித்த அவருக்கு வயிற்றை என்னவோ செய்தது. "மாமிசம் சாப்பிட்டால் சரியாகி விடும்" என்று பக்கத்தில் இருந்தவர்கள் சொல்ல, அவர் கொஞ்சம் மாமிசம் வாங்கிச் சாப்பிட்டார்.

மாமிசம் சாப்பிட்டதுதான் தாமதம், வேசியின் விடுதிக்குச் செல்ல வேண்டுமென்று அவருக்குத் தோன்றிற்று. அவர் அப்படியே அங்கே சென்றார். ஆக, எந்த வேசியின் விடுதி, மாமிசக் கடை, மதுபானக் கடை ஆகியவற்றை அவர் வெறுத்தாரோ அவற்றையே அவர் சூதாட்டத்தின் மூலமாக நாட வேண்டியதாகிவிட்டது. □

ராமநாமத்தின்மீது பார்வதியின் பக்தி கண்டு சிவன் மகிழ்ந்தார். ஆகவே அம்பாளின் உருவத்தை ஏற்று அர்த்தநாரீசுவரர் ஆனார். ராமநாமத்தின் பெருமையைச் சிவன் அறிந்திருந்ததனால் அவர் விழுங்கிய ஆலகால விஷம் அமுதமாகிவிட்டது.

—துளசி ராமாயணம்

வேதாந்தச் சிந்தனை

தொகுப்பு : பி. ரங்கஸ்வாமி

உ. வே. முக்கூர் லட்சுமீநரசிம்மாசாரியாரின் சொற்பொழிவிலிருந்து சில நவமணிகள் இங்கே தொகுத்துத் தரப்பெறுகின்றன.

நம் முன்னோர்களாகிய ரிஷிகள் தயிரைக் கடைந்து வெண்ணெய் எடுப்பது போல் வேதங்களைக் கடைந்து அவற்றின் சாரத்தை எடுத்தார்கள். ரிக்வேதத்தைக் கடைந்து அதன் சாரத்தை எட்டு எழுத்துக்களில் வடித்தார்கள். இதுபோல யஜுர் வேதத்திலிருந்து எட்டு எழுத்துக்களையும், ஸாம அதர்வவேதங்களிலிருந்து எட்டு எழுத்துக்களையும் எடுத்தார்கள். இந்த இருபத்துநான்கு எழுத்துக்களும் சேர்ந்து காயத்ரி மந்திரம் கிடைத்தது. காயத்ரி மந்திரம் நான்கு வேதங்களின் சாரம். இத்துடன் அவர்கள் விட்டுவிடவில்லை. காயத்ரி மந்திரத்தை மேலும் ஆராய்ந்ததில் முதல் எட்டு எழுத்துக்களிலிருந்து பூ:, இரண்டாவது எட்டு எழுத்துக்களிலிருந்து புவ:, மூன்ருவது எட்டு எழுத்துககளிலிருந்து ஸுவ: என்ற பதங்கள் கிடைத்தன. இவற்றையும் மேலும் சுருக்கியதில் மூன்று வார்த்தைகளும் முறையே அ, உ, ம என்ற எழுத்துக்களைக் கொடுத்தன. அ, உ, ம ஆகிய மூன்றும் இணைந்து பிரணவம் ஆயிற்று இவ்வாறு வேதம் முழுவதையும் பிரணவத்துக்குள் அடக்கிவிட்டார்கள்.

* * *

மனிதன் கடவுளை அடையும் வழியை உபநிஷத்துக்கள் காட்டுகின்றன. மனிதன் உலகியலில் இன்புறவும், இந்திர பதவி அடையவும், பரமபதம் பெறுவதற்குமான மூன்று வழிகளை வேதங்கள் காட்டுகின்றன. வேதங்களின் பூர்வ பாகம், முதல் இரண்டு சாதனைகளுக்கான மார்க்கங்களை விவரிக்கிறது. ஆனுல் இவை இரண்டும் நிலையற்றவை என்பதனுல் பரமாத்மாவுடன் ஐக்கியம் பெறும் ஆத்ம சாதனைக்கான வழியை வேதத்தின் பிற்பகுதி (உபநிஷத்து) காட்டுகிறது.

பரமாத்மாவை அடைய ஜீவாத்மா ஒன்பது படிகளைக் கடக்கவேண்டும். இவற்றில் முதல் ஐந்து படிகளான விவேகம், நிர்வேதம், விரக்தி, பீதி, பகவானை உபசரித்தல் இவற்றை ஜீவன் பிரயத்தனப்பட்டுக் கடந்தால் மற்ற நான்கு படிகளான ஸ்தூல சரீரத்திலிருந்து விடுபடுதல், சூட்சம சரீரத்திலிருந்து விடுபடுதல், நாராயணன் உருவைப் பெறுதல், நாராயணனுல் ஆலிங்கனம் செய்யப்பெற்று அவன் திருவடியில் கலத்தல் என்பவற்றை இறைவனே நடத்தி வைப்பான்.

இப்போது நாம் கடக்கவேண்டிய படிகளைப் பார்ப்போம்:—விவேகம்—பெரியோர் கூறுவதை ஏற்கும் அறிவு. நிர்வேதம்—கடந்த காலத்தில் தான் செய்த தவறுகளை உணர்ந்து வருந்துதல். விரக்தி—உலகவிஷயங்களில் பற்று நீக்கி இறைவனிடம் மட்டுமே பற்று வைத்து வைராக்கியமாக இருத்தல். பீதி—பல தவறுகள் செய்த நம்மை இறைவன் ஏற்றுக்கொள்வானே என்ற ஐயம். பகவத் உபசரணை—இதனுல் இயன்ற வகையில் பகவானை உபசரித்துப் போற்றுதல்.

பாகவத உத்தமர்களில் முதன்மையானவன் என்று கருதப்படும் பரதன், உபநிஷதம் காட்டிய வழியில் நடந்து இறைவனை அடைந்தவன். விவேகம்—மற்றவர் என்ன சொன்னுலும் ஏற்க மறுத்து, நியாயத்தை வலியுறுத்தி, ராமனுக்கு முடிசூட வேண்டும் என்று உறுதியாக நின்றது. நிர்வேதம்—ராமனது நிலைமைக்குக் காரணம் தான் செய்த பாவங்களே என்று கருதி, தான் செய்யாத குற்றத்துக்கும் வருந்துதல். விரக்தி - உலக விஷயங்களில் பற்றுவிட்டு ராமபக்தியில் ஊன்றி நின்றது. பீதி—தன்னை ராமன் ஏற்றுக்கொள்வானே

என்று அஞ்சி, வஸிஷ்டர், சுமந்திரர், கோசலை முதலியோரைத் துணையாகக்கொண்டு சித்திர கூடத்துக்கு வந்தது.

இனி உபநிஷதம் வர்ணிக்கிறபடி ஜீவாத்மாவின் யாத்திரையும் பரதனுக்கு எவ்வாறு அமைந்தது என்பதை ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

1. ஜீவாத்மா தேவலோகத்தில் ஒரு நதியைக் கடந்ததும் ஸ்தூல சரீரத்தை விட்டுப் புனிதமடைகிறது. பரதன் கங்கையைக்கடந்து புனிதமடைந்தான்.

2. ஜீவாத்மாவுக்கு ஐந்நூறு அப்ஸரஸ்திரீகள் சந்தனம், பட்டு முதலியவற்றுடன் வரவேற்பு அளிக்கிறார்கள். பரதனுக்குப் பரத்வாஜ முனிவரின் ஆசிரமத்தில் முனிவரின் வரவேற்புக் கிடைக்கிறது.

3. ஜீவாத்மாவை அமானவன் என்பவன் மகாவிஷ்ணுவிடம் அழைத்துச் செல்கிறான். குகன் பரதனை ராமபிரானிடம் அழைத்துச் செல்கிறான்.

4. பரமாத்மாவான நாராயணன் பாற்கடலில் ஆதிசேஷன் மீது பள்ளி கொண்டு மகாலக்ஷ்மியுடன் திகழ்கிறான். கங்கையின் அலைகள் சித்திரகூடமலையில் மோத, சமுத்திர மத்தியில் இருப்பதுபோலவே சித்திரகூடத்தில் ஆதிசேஷனான லக்ஷ்மணனுடனும், மகாலக்ஷ்மியான சீதையுடனும் பரம்பொருளான ராமன் வீற்றிருக்கிறான்.

5 தன்னிடம் அழைத்து வரப்பட்ட ஜீவாத்மாவைப் பரமாத்மா ஆலிங்கனம் செய்து குசலம் விசாரிக்கிறார். பரதனைத் தழுவி ராமன் குசலம் விசாரிக்கிறான்.

6. மகாவிஷ்ணு தமது திருவடிகளை ஜீவாத்மாவின் தலையில் வைத்து அனுக்கிரகிக்கிறார். பரதன் தலையில் தன் பாதுகைகளை வைத்து ராமன் அனுக்கிரகிக்கிறான். இவ்வாறு இந்த ஒப்புமை பரதன் விஷயத்தில் நிறைவு பெறுகிறது.

இறைவனை அடையும் வழியை இன்னொரு வகையில் கூறுகிறது முண்டகோபநிஷத். இதன்படி, ஒருவன் பிரணவம் என்கிற வில்லை எடுத்து ஆத்மாவையே அம்பாகத் தொடுத்துப் பிரம்மத்தைக் குறிவைக்க வேண்டும். 'அ' என்கிற மகாவிஷ்ணுவாக ராமனும், 'உ' என்கிற மகாலக்ஷ்மியாக சீதையும், 'ம' என்கிற ஜீவாத்மாவாக லக்ஷ்மணனும் விளங்குகிறார்கள். நடந்துசெல்லும்போது ராமன் முன்பும், சீதை நடுவிலும், லக்ஷ்மணன் பின்னாலுமாக அ, உ, ம என்ற வரிசை அமைந்து மூவரும் பிரணவ உருவாக விளங்குகிறார்கள். வில்லை அடைந்து அதன்மூலம் தன் இலக்கை அம்பு அடைவதுபோல, பிரணவரூபமான இவர்களை அணுகித் தன் ஆத்மாவை, பிரம்மத்தை நோக்கிச் செலுத்துகிறான் பரதன்.

* * *

கண்ணன் வெண்ணெய் திருடும்போது வீட்டுக்காரி வந்துவிடுகிறாள். இருட்டான அறையில் கண்ணன் ஒரு மூலையில் ஒளிந்து கொள்கிறான். ஆனால் அவன் தலை கழுத்து இடை கால் ஆபரணங்கள் குலுங்கிச் சப்தப்படுத்தத் தன்னைக் காட்டிக்கொடுத்துவிடுமோ என்று அஞ்சி, சப்தம் செய்யாதிருக்குமாறு அவற்றினிடம் இறைஞ்சுகிறான். இந்தச் சிறு நிகழ்ச்சிக்கு ஓர் உட்பொருள் உண்டு. தலை கழுத்து இடை கால் ஆபரணங்கள் முறையே ரிக் யஜுஸ் ஸாம அதர்வ வேதங்களைக் குறிப்பவை. நம் கண்ணுக்குத் தெரியாமல் எங்கோ ஒளிந்திருக்கும் இறைவனை இந்த வேதங்கள் நமக்குக் காட்டிக் கொடுத்துவிடும் — ஒளிந்திருக்கும் கண்ணனைக் காட்டிக் கொடுக்கக் கூடிய ஆபரணங்களைப் போல. இந்தக் காட்சியை வேதாந்ததேசிகன் ஒரு சுலோகத்தில் விவரிக்கிறார்.

* * *



ராமாயணத்தில் பரதனின் மதிப்பு, கதைப் போக்கில் உயர்ந்துகொண்டே போவதைக் கம்பர் அழகாகக் காட்டுகிறார்.

பரதனுக்கு முடிசூட்டத் தந்தை நிச்சயித்திருப்பதை ராமன் கோசலையிடம் வந்து சொல்கிறான். 'உன்னிலும் பரதன் மூன்று மடங்கு உயர்ந்தவன்' என்கிறாள் கோசலை.

பிறகு கங்கைக்கரையில் பரதனை உண்மையாக அறிந்துகொண்ட குகன், 'ஆயிரம் ராமர் உனக்கு இணையாவார்களா?' என்று வியக்கிறான்.

கதை இறுதியில் பதினான்கு ஆண்டுகள் முடிந்தும் ராமன் திரும்பாததனால் வருந்தித் தீக்குளிக்க முயன்ற பரதனைத் தடுக்கும் கோசலை, 'பலகோடி ராமன்கள் இருந்தென்ன நீ ஒருவன் இல்லாவிடில் அறம் நிலைக்காது' என்கிறாள். முதலில் பரதனை அளக்கும் ஓர் அளவுகோலாக இருந்த ராமன், இறுதியில் பரதனை அளக்க முடியாமற் போவதை, 'எண்ணில் கோடி ராமர் இருந்தென்ன' என்று கணக்கிட முடியாமற் போவதன் மூலம் உணர்த்துகிறார் கம்பர். பகவானைவிடப் பாகவத உத்தமர்கள் பல மடங்கு உயர்ந்தவர்கள் என்பது பெரியோர் கருத்து.

வேதம் எவ்வளவு பழையது?

பிரம்மாவுக்கு ஆதியில் வேதத்தை உபதேசித்த மகாவிஷ்ணு, வேதத்தைத் தாம் எடுத்து இயம்புவதாகக் கூறுகிறார்; தாம் இயற்றியதாகக் கூறவில்லை. வேதம் தானாக உண்டானது. வேதம் பரமாத்மாவின் மூச்சுக் காற்று. மூச்சு இல்லையென்றால் மனிதன் இல்லை. அதுபோல் வேதம் இல்லையானால் கடவுளே இல்லை என்று ஆகிவிடுமா என்று கேட்கலாம். வேதம் இல்லையென்றால் நம்மால் கடவுளை உணர முடியாது என்பதே பொருள்.

வேதம் முடிவற்றது. வேதத்தை முழுவதும் கற்க விரும்பிய பரத்வாஜ முனிவர் தவம் செய்து இந்திரனிடம் வரம் பெற்றுத் தமது ஆயுளை இரண்டு முறை நீடித்துக்கொண்டு முந்நூறு ஆண்டுகள் வேதத்தைக் கற்று உணர்ந்தார். ஆனால் அவரது பணி முடியவில்லை. அப்போது இந்திரன் அவருக்கு மூன்று பெரிய மலைகளைக் காட்டினான். 'அந்த மூன்று மலைகளும் வேதங்கள் என்றால் நீங்கள் கற்றது மூன்று பிடி மண் தான்' என்று உணர்த்தியதும் தான் வேதத்தை முழுவதும் கற்க நினைத்தது எத்தகைய முடியாத கற்பனை என்று அவருக்குப் புரிந்தது.

* * *

கீதையில் கண்ணன் தன்னை அடையும் மார்க்கங்களை உபதேசிக்கிறான். உபதேசிப்பது சுலபம். செய்து காட்டுவது கடினம். ஆனால் தான் துவாபர யுகத்தில் உபதேசித்த மார்க்கங்களை அதற்கு முன்பே கிருதயுகத்தில் அனுஷ்டித்துக் காட்டியவன் பகவான். ராமாயணத்தில் சத்ருக்னன் ஞானமார்க்கத்தையும் லக்ஷ்மணன் கர்மயோகத்தையும், பரதன் பக்தி மார்க்கத்தையும், விபீஷணன் சரணாகதி மார்க்கத்தையும் அனுஷ்டித்துப் பரம்பொருளான ராமபிரானை அடைந்தார்கள். முந்திய யுகத்தில் ராமாவதாரத்தில் அனுஷ்டித்துக் காட்டிய இந்த மார்க்கங்களையே அடுத்த யுகத்தில் அர்ஜுனனுக்கு உபதேசித்தான் கண்ணன்.

* * *

இறைவனின் திருநாமம் எப்படிப் பக்தர்களைக் காக்கிறது என்பது மூன்று வழிகளில் வெளிப்பட்டுள்ளது:- 1. கண்கூடாக (த்ருஷ்டம்), 2. மறைமுகமாக (அதிருஷ்டம்), 3. கண்கூடாகவும், மறைமுகமாகவும்.

கண்கூடாக வெளிப்பட்டது அஜாமிளன் சரித்திரத்தில். பகவானையே நினைக்காத இவன் சாகும் தறுவாயில் தன் மகனை 'நாராயணா!' என்று பெயர் சொல்லி அழைத்ததன் பலன, அவனை அழைத்துச் செல்ல வந்த யமதூதர்களை வதம் செய்து அனுப்பிவிட்டு விஷ்ணு தூதர்கள் வைகுண்டத்துக்கு அழைத்துச் செல்ல வந்துவிட்டார்கள். இதை அஜாமிளனே கண்கூடாகப் பார்த்தான்.

திரௌபதி பெயர் சொல்லி அழைத்ததும் புடைவை சுரந்தது. அவன் நாமம் காக்கும் என்பதை 'அத்ருஷ்டமாக'க் காட்டுகிறது.

கஜேந்திரன் என்ற யானை ஐந்நூறு வருஷம் தன் உடல்வலிமையை நம்பித் தன்னைப் பிடித்த முதலையுடன் போராடியது (அகங்காரம்). தனக்கு வலிமை போய்விட்டது என்று உணர்ந்ததும் தனது சுற்றத்தினரான

மற்ற யானைகளை நம்பிக் காத்திருந்தது. (மமகாரம் என்னுடையது). அவர்களும் தோற்ற பின் இறைவனை அழைத்தது. அகங்காரம் மமகாரம் ஆகிய இரண்டும் அழிந்தபின் தான் இறைவனது சிந்தனைவரும். அப்போது பகவான் விரைந்து வந்து முதலையை அழித்து யானையை விடுவித்தது த்ருஷ்டம். தன் பெயரைச் சொன்னதற்காக யானைக்கு மோட்சம் அருளியது அத்ருஷ்டம்.

* * *

திரௌபதிக்கு ஐந்து கணவர் இருந்தும் அவள் மானபங்கபடுத்தப்பட்டபோது அவர்கள் செயலற்றிருந்தார்கள். அவளது மானத்தைப் பகவான்தான் காப்பாற்றினன். நமக்குத் துன்பம் வரும்போது ஐம்புலன்களும்செயலற்றுப் போய்விடுகின்றன. அப்போது பகவானை நினைத்தால் நம்மைக் காப்பாற்றுவான்.

* * *

பரம ஏழையான ஒருவன் ஒரு பணக்காரனிடம் சென்று யாசித்தான். அவன் அந்த ஏழைக்குத் தன் வீட்டுக்குப் பின்னல் இருந்த நிலத்தில் இருந்த ஆயிரம் யானைகளை தானமாக வழங்கினன். ஆனல் ஏழையான அவனுக்கு அந்த யானைகளை எப்படி அழைத்துச் செல்வது என்றுகூடத் தெரியவில்லை. ஞானம் பெறவழியில்லாத சாதாரண மனிதர்கள் பக்தி மார்க்கத்தை அறிந்து இறைவனிடம் பக்தி செலுத்தி முக்தி பெறுவதும் இதுபோன்ற கடினமான விஷயம்தான். ஆனல் ஒரு யானை தானே தன் காலில் சங்கிலியைக் கட்டிக் கொண்டு தன்னைக் கட்டிப்போடுமாறு அவனிடம் வந்து நிற்பது போல பகவான் தன்னைக் கட்ட ஏதுவாகத் தன் நாமங்களை அருளியிருக்கிறர்.

- வேதபாஷ்யத்தில் வித்யாரண்யர்

* * *

கண்ணன் ஸஞ்ஜயனிடம் தனது குறை ஒன்றைச் சொன்னன்: "திரௌபதி என்னை அழைத்தபோது நான் போய் அவளைக் காப்பாற்றவில்லை என்பது ஒரு குறைதான்."

ஸஞ்ஜயன் வியப்புடன், "நீதான் காப்பாற்றினயே!" என்றன்.

"நான் எங்கே காப்பாற்றினேன்? 'கோவிந்தா' என்ற என் நாமம் அல்லவா காப்பாற்றியது!" என்றன் கண்ணன்.

* * *

வராக அவதாரம் எடுத்து ஹிரண்யாக்ஷனிடமிருந்து உலகை மீட்ட வராகமூர்த்தியிடம் பூதேவி பணிந்து, 'உலக மக்கள் கஷ்டங்களிலிருந்து விடுபட வழிகாட்டவேண்டும்'' என்றள்.

"என் பெயரைப் பாடி என்னை மலர்தூவி அர்ச்சனை செய்து என் திருவடியில் தலை வைத்து வணங்கினல் எல்லாக் கஷ்டங்களிலிருந்தும் விடுபடலாம்'' என்று பகவான் அருளினர்.

பின்னல் ஆண்டாளாகப் பிறந்த பூதேவி இதை மனதில் கொண்டுதான் தனது திருப்பாவையில், முதல் பத்துப் பாடல்களில் 'பேர் பாடி' என்றும், அடுத்த பத்துப் பாடல்களில் 'மலர்தூவி' என்றும், கடைசிப் பத்துப் பாடல்களில் 'அடிபணிந்து' என்றும் பாடியிருக்கிறள்

மேலும், நாம சங்கீர்த்தனம் தலைசிறந்த யாகத்துக்குச் சமம் என்றும் பகவான் அருளியிருக்கிறர். ஒரு குறிப்பிட்ட யாகத்தில் மூன்று பாத்திரங்களில் ஹோமம் செய்யப்படும். ஒவ்வொரு முறையும் 'திரிவிக்கிரமன' பெயரைச் சொல்லுவார்கள்.

பகவந்நாம ஸங்கீர்த்தனம் செய்து 'யாகம்' புரிந்த ஆண்டாளும், திருப்பாவையில் மூன்று பத்துக்களிலும் ஒவ்வொரு முறை திரிவிக்கிரமனைப் பாடியிருக்கிறள். முதற் பத்தில் 'ஓங்கி உலகளந்த உத்தமன் பேர் பாடி' என்றும், இரண்டாவது பத்துப் பாடல்களில், 'அம்பர' மூடறுத்து ஓங்கி உலகளந்த உம்பர் கோமானே!' என்றும், மூன்றவது பத்தில் 'அன்று இவ்வுலகம் அளந்தாய் அடி போற்றி!' என்றும் திரிவிக்கிரமனை குறிப்பிட்டுத் தனது நாமஸங்கீர்த்தன யாகத்தை முழுவதும் நிறைவு செய்கிறள்.

* * *

நம் உடல் ஒரு தேரைப் போன்றது. ஆத்மாதான் சாரதி. இந்திரியங்கள் குதிரைகள். மனம் கடிவாளம் மனமாகிய கடிவாளத்தைக் கொண்டு இந்திரியங்களாகிய குதிரைகளை அடக்கிச் சரீரத் தேரை நடத்திச் சென்று, ஆத்மா தன் பயணத்தை மேற்கொள்ளவேண்டும். தேரோட்டி போய்ச்சேர வேண்டிய இடம்தான் முக்கியம். தேரும் குதிரைகளும் தோட்டியின் பயணத்துக்கு உதவத்தான். அதுபோல மனமும் இந்திரியங்களும் சரீரமும் ஆத்மா தன் குறிக்கோளாது இறைவனை அடைய உதவுவதற்குத்தானே தவிர அவற்றுக்கென்று தனி லட்சியம் எனவும் கிடையாது ○

மனுஸ்மிருதியில் சில கருத்துக்கள்

'அண்ணு' சுப்ரமண்யம்

1. தர்மத்தைப் பின்பற்றுவதனுல் துன்பம் ஏற்பட்டாலும் மனதை அதர்மத்தில் செலுத்தக்கூடாது. அதர்மத்தைக் கைக்கொள்பவர்களும் பாவிகளும் விரைவில் அழிந்துபோகிறுர்கள்.

2. உலகில் அதர்மம் செய்யப்பட்டால் அது பசு பால் கறப்பது போல் உடனே பயனைத் தருவதில்லை. மெல்லமெல்ல அதற்குரிய காலம் வந்த பின்பு அதர்மம் செய்தவனுடைய வேர்களைக் களைந்து அழித்துவிடுகிறது.

3. அதர்மத்தால் மேலேறுவது போல் அப்போதைக்கு ஏறுகிறுன்; பிறகு மங்களங்களைப் பார்ப்பதுபோல் பார்க்கிறுன்; பிறகு எதிரிகளை வெல்லுகிறுன்; முடிவில் வேருடன் அழிந்து போகிறுன்.

4. சத்தியமும் தர்மமும் கூடிய நல்லொழுக்கத்திலும் பரிசுத்தத்திலுமே எப்போதும் இன்புற வேண்டும். சீடர்களையும் தர்மத்தைக் கைக்கொள்ளச் செய்யவேண்டும். வாக்கையும் கையையும் வயிற்றையும் நன்கு அடக்கியவனுக இருக்கவேண்டும்.

5. தர்மத்திலிருந்து விலகிய பொருளையும் இன்பத்தையும் தள்ளிவிட வேண்டும். தர்மமும் சுகமற்றதாகவும் உலகம் வெறுப்பதாகவும் இருக்குமானுல் விட்டுவிட வேண்டும்.

6. தானம் வாங்குவதற்கு தகுதியுடையவனுக இருந்த போதிலும் ஒருவன் அதில் அதிகப் பற்று வைக்கக் கூடாது. தானம் வாங்குவதனுல் விரைவில் பிரம்மதேஜஸ் அழிந்துபோய்விடும்.

7. யாசிக்கப்பட்டவன் யாசகனிடம் குற்றம் காணுமல் சிறிதளவாவது சக்திக்கு இயைந்தபடி கொடுக்க வேண்டும். அப்படிச் செய்தால் எல்லா வகையிலும் காப்பாற்றக் கூடிய ஒரு சத் பாத்திரத்தை அது தானே கொண்டுவரும்.

8. தீர்த்தம், அன்னம், பசு, பூமி, வஸ்திரம், எள், பொன், நெய் முதலிய எல்லாத் தானங்களை விடப் பிரம்மஞானம் சிறந்தது.

9. எந்த எந்த நோக்கத்துடன் எந்த எந்தத் தானத்தைச் செய்கிறுனே, அந்த அந்த நோக்கத்திற்கிணங்க அவன் அதே மாதிரி திரும்பவும் பூஜிக்கப் பெற்றுப் பிரதிபலனை அடைகிறுன்.

10. இந்த உலகை விட்டபின் உதவிக்காகத் தந்தையோ தாயோ உடன் இருக்க மாட்டார்கள். புத்திரர்களோ உறவினர்களோ உடன் இருக்க மாட்டார்கள். தர்மம் மட்டும் தான் என்றென்றும் துணைநிற்கும்.

11. ஜீவன் ஒருவனுகவே பிறக்கிறுன். ஒருவனுகவே இறக்கிறுன்; ஒருவனுகவே புண்ணியத்தை அனுபவிக்கிறுன்; ஒருவனுகவே பாவத்தை அனுபவிக்கிறுன்.

12. ஆகையால் தனக்கு உற்ற துணையாக நாள்தோறும் சிறுகச் சிறுக மெதுவாக தர்மத்தைச் சேகரிக்க வேண்டும். தர்மத்தின் துணையால்தான் ஒருவன் கடத்தற்கரிய மாயையின் இருளைக் கடக்கிறுன்.

13. தர்மத்தையே முக்கியமாகக் கொண்டு தவத்தால் பாவத்தை ஒழித்த புருஷனை, ஒளி பொருந்திய பரலோகத்திற்கு அந்தத் தருமம் அழைத்துச் செல்கிறது.

14. குருமார்களையும் வேலைக்காரர்களையும் ஆதரிப்பதற்கும் தேவதைகளையும் அதிதிகளையும் பூஜிப்பதற்கும் எல்லோரிடமும் தானம் வாங்கலாம். ஆனுல் அதைக்கொண்டு தன்னை திருப்தி செய்துகொண்டு வாழக்கூடாது.

15. தனிமையில் இருந்துகொண்டு தான் ஒருவனுக ஆன்மிக வாழ்க்கைக்கு இயைந்ததை எப்போதும் தியானம் செய்யவேண்டும். அப்படி ஒருவனுகத் தியானம் செய்பவன் உத்தமமான நன்மையை அடைகிறுன்.

16. எவன் பிராணிகளை கட்டுவதையோ கொல்லுவதையோ செய்யாமல் எல்லா உயிர்களுக்கும் நன்மையையே விரும்புகிறுனே அவன் அளவு கடந்த இன்பத்தை அனுபவிக்கிறுன்.

ஆன்மிக உரையாடல்

ஜூலை 5

இன்று மழைத்தூற்றல் போட்டுக் கொண்டேயிருக்கிறது. என்றாலும் வெப்பமும் கடுமையாக உள்ளது.

சுவாமி துரியானந்தர்:— வராந்தாவில் தூங்குவது மிகவும் சிரமமாக இருக்கிறது. காற்றின் ஓர் இழையைக்கூடக் காணோம். (சுவாமி துரியானந்தர் 'அ'விடம்) நல்லது, உடம்புக்காக இவ்வளவு சிரமமெடுத்துக் கொண்டு என்ன பிரயோஜனம்? எல்லோரும் உடலுக்காகவே எத்தனையோ செய்கிறார்கள். ஆனால் அது எங்காவது செம்மையாகிறதா என்ன? சரீரம் க்ஷணபங்குரம்—'உடலும் எளிதே உடைபடுவது.'

சேவாச்ரமத்திலுள்ள அநாதை இல்லம் குறித்தும், சிறுவர்களின் கல்வி பற்றியும் பேச்சுத் திரும்பியது.

சுவாமி துரியானந்தர்:—சேவாச்ரமங்கள் அமைக்கும் கருத்தை நாடு இப்போது மேற்கொண்டிருக்கிறது. தொண்டு புரியும் சங்கங்களாக எத்தனை சேவா சமிதிகள் தொடங்கப்படுகின்றன என்று நீயே பார்க்கிறாய் அல்லவா? இப்போதைக்கு நாம் இந்த சேவாச்ரமப் பணியிலிருந்து சற்று ஒதுங்கிப் பார்க்கலாம். கல்விப் பணியை மேற்கொள்வதற்குத் தயாராகலாம். சுவாமி சாரதானந்தரோடு இது குறித்துப் பேசினேன். இதுவரை கல்வித் துறையில் நம்மால் எதுவும் செய்ய இயலவில்லை. இந்த வேலையை இப்போது எடுத்துக் கொண்டாக வேண்டும்.

சுவாமி அ:—நமது சிறுவர் இல்லத்தின் வராந்தாவில் பள்ளியிலேயே இருப்பிடம், உணவு முதலியன பெறுமல், வகுப்புகளுக்கு மட்டும் ஆஜராகிக் கல்வி கற்கும் பையன்களுக்கென ஒரு வகுப்புத் தொடங்கலாம். ஆனால் இதில் கஷ்டம் என்னவென்றால், மாணவர்கள் தாம் பள்ளிக்கட்டணமோ அபராதமோ செலுத்த வேண்டியதில்லை என்று கண்டு கொண்டதும் தங்களது கல்வி நலனில் கவனமிழந்து, பள்ளிக்கு ஒழுங்காக வருவதிலேயே தவறத் தொடங்குகிறார்கள்.

சுவாமி துரியானந்தர்:—இப்படிப்பட்டவர்களை எச்சரித்து வெளியேற்றிவிட வேண்டும். த-பாபுவும் இப்படி ஒரு பள்ளியைத் தொடங்க வேண்டும் என்று விரும்புகிறார். இதற்காகக் கொஞ்சம் நிலம் கொடுப்பதாக முன் வந்திருக்கிறார். பெண்களுக்கான பள்ளி இப்போதே திறந்தாகிவிட்டது. பிள்ளைகளுக்குத் தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் இப்போது அவருக்குத் தேவை.

உண்மையிலேயே தகுதி படைத்தவர்களை நான் காணமுடியவில்லை. இப்போது ஏராளமான பட்டதாரிகள் ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனிலே இருக்கிறார்கள். ஆயினும் அவர்களிடம் பள்ளி ஆசிரியர்களுக்கு இருக்கவேண்டிய ஊக்க உணர்ச்சியைத் தேடினால் பயனின்றிப் போகிறது. ஒட்டுமொத்தமாக எல்லோருமே இப்படித்தான் இருக்கிறார்கள் என்று நான் சொல்லவில்லை. ஆயினும் பெரும்பான்மையானவர்கள் கட்டுப்பாட்டின் கீழ் வராதவர்களாகவே உள்ளனர். வீட்டை விட்டு வெளிவந்தபின் தாங்கள் உழைப்பை எல்லா விதத்திலும் தவிர்த்தேயாகவேண்டும் என்பதுதான்' அவர்களது கருத்தாக இருக்கிறது. அவர்களுக்கென்று ஒரு வேலை கொடுக்கப்பட்டால் அதை மாத்திரம் செய்வது, அதற்கு மேல் செய்யக்கூடாது என்று நினைக்கிறார்கள். அதோடுசிலர், இதெல்லாம் சுவாமிஜியின் கருத்துக்கள்தாம் என்றும் ஸ்ரீ ராமகிருஷ்ணருடையதல்ல என்றும் கூறுகிறார்கள். கடவுளே, கடவுளே! சுவாமிஜியின் கருத்துக்களும் குரு மகராஜின் கருத்துக்களும் வேறு வேறா என்ன? யாருக்காவது சந்தேகம் இருந்தால் அவர் ஏன் முன்னேவந்து அந்தச் சந்தேகத்தை வெளியிட்டுத் தீர்த்துக் கொள்ளாமலிருக்கிறார்?

கலந்து பேசுவது எப்போதுமே நலன் பயப்பதாகும். உனக்கு—ஐத் தெரியுமோ? அவருக்கும் இந்த அபிப்பிராயந்தான்.* கல்கத்தாவில் தூய அன்னையின் இருப்பிடத்தில் நான் கடுமையாக நோய்வாய்ப்பட்டிருந்தபோது அவரோடு நான் நீண்ட விவாதங்கள் நடத்துவதுண்டு. அவர், "முதலில் நாம் தியான வாழ்க்கையை மேற்கொண்டு கடவுளைக் கண்டறிவோம், அதன்பின் உழைக்கப் போகலாம்" என்பார்.

ஒவ்வொருவரும் தியானம் பயில்வேன், ஜபம் பயில்வேன் என்கிறார். ஆனால் உண்மையிலேயே அதைச் செய்கிறார்களா என்ன? அதோடு, இது ஒன்றுதான் ஆத்மசாட்சாத்காரத்திற்கு ஒரே வழியா? ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனில் இருப்பது, ஆனாலும் அதன் கோட்பாட்டை ஏற்பதில்லை என்பது மிகவும் மோசமாகும். அந்தக் கோட்பாடு என்னவென்று ஒருவர் ஆராய்ந்து பார்க்கவேண்டும். கோட்பாட்டை ஏற்காத இவர்கள் மிஷனால் ஏற்படும் அனுகூலங்களை மட்டும் எடுத்துக்கொள்வார்களாம், அதன் லட்சியங்களான கொள்கைகளை எடுத்துக்கொள்ளமாட்டார்களாம். சுவாமிஜியின் உயிர்ச்சி—பிறருக்குத்தொண்டு செய்யவே தாம் நூறு பிறப்பெடுக்க விரும்புவதாக அவர் சொன்னாரே, அந்த உயிர்ச்சிதான்—மிஷனின் சமயக்கோட்பாடு. இதை அவர்கள் எவ்வாற்றானும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். இல்லாவிட்டால் இவர்கள் ஏன் ராமகிருஷ்ண மிஷனில் இருக்கவேண்டும்? வேறு சந்நியாசிகள் ஏகப்பட்டவர் இல்லையா என்ன? அவர்களைப் போல இவர்களும் பிக்ஷை எடுத்துக்கொண்டும் தியானம் செய்துகொண்டும் இருக்கட்டும். □

* அதாவது ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஆன்மிகச் சாதனைகளை மாத்திரமே விதித்தார், சுவாமி விவேகானந்தர்தாம் பொதுப் பணியையும் அதோடு சேர்த்துவிட்டார் என்ற அபிப்பிராயம்.

ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் நிவாரணப் பணிகள்

ஆந்திரப் பிரதேசத்திலுள்ள ஸ்ரீகாகுளம் என்ற இடத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள் கட்டித் தரும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

ஒரிஸ்ஸா மாநிலத்தைச் சேர்ந்த குனுபூர் (Gunupur) என்ற இடத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள் கட்டித்தரும் பணி தொடர்ந்து நடந்து வருகிறது.

மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த திக்ராவில் மாணவிகளுக்காக மூன்று பள்ளிகள் கட்டப்பட்டு வருகின்றன.

குஜராத் மாநிலத்தைச் சேர்ந்த மோர்வியில் 433 வீடுகள், மூன்று பள்ளிக்கூடங்கள், ஒரு மருத்துவமனை ஆகியவை கட்டி முடிக்கப்பெற்று வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டது.

ராஜஸ்தானைச் சேர்ந்த ஜயப்பூரில் சமைத்த உணவை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டோருக்கு இதுவரை மிஷன் வழங்கி வந்தது. அந்தப் பணி இப்போது நிறைவடைந்தது. ஜயப்பூர் மாவட்டத்தில் 30 கிராமங்களில் மிஷன் நிவாரண வேலைகளை மேற்கொண்டிருந்தது. சமையல் பாத்திரங்கள், துணிகள் ஆகியவற்றை மிகவும் பாதிக்கப்பட்ட 800 பேர்களுக்கு மிஷன் வழங்கியது.

பங்களாதேஷ்: இங்கு மிஷனின் இரண்டு கிளைகளில் ஏழை எளியோருக்குத் துணிகள் விநியோகிக்கப்படுகின்றன. மூன்று கிளைகளில் பால் விநியோகிக்கப்படுகிறது. ஆறு கிளைகளின் மூலம் இலவச மருத்துவ உதவி வழங்கப்பட்டு வருகிறது.

செய்திகள்

□ வளையாம்பட்டு, "சுவாமி" விவேகானந்தர் மன்றத்தின் முதலாண்டு விழா ஆகஸ்ட் 21-ஆம் நாள் இரவு 7 மணிக்குக் கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சியில் கலந்துகொண்ட சுவாமி தன்மையானந்தர் சிறப்புரை வழங்கினார்.

□ மதுரை, நாராயணபுரத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ண நினைவு ஆய்வு நிலையத்தின் சார்பாக கிராமப்புறங்களில் அவ்வப்போது மருத்துவப் பணி மேற்கொள்ளப்படுகிறது.

டாக்டர் சண்முகம், டாக்டர் தயாளன், டாக்டர் சுகுமார் ஆகியோர் 23—8—81 ஆம் நாள் மாலை 4 மணிக்கு நாராயணபுரத்திற்கு அருகிலுள்ள நாநாகுளம் கிராமத்திற்குச் சென்று சுமார் 200 பேர்களுக்கு மருத்துவ உதவிகளை இலவசமாக வழங்கினர். மாணவர் இளைஞர் இயக்கத்தைச் சேர்ந்த இளைஞர்கள் 12 பேர்களும் உடன் சென்றிருந்தனர்.

அன்று மாலை 7 மணிக்கு நாராயணபுரம், ஸ்ரீராமகிருஷ்ண நினைவு ஆய்வு நிலையத்தில் சுவாமி கமலாத்மானந்தரின் ஆன்மிகச் சொற்பொழிவு இடம் பெற்றது.

□ ஸ்ரீராமகிருஷ்ண சேவா சங்கத்தில் சார்பாக 24—8—81 மாலை அடையாறு ஸ்ரீஅனந்த பத்மநாப ஸ்வாமி கோவில் மண்டபத்தில் சுவாமி ரங்கநாதானந்தரின் ஆன்மிகச் சொற்பொழிவு நடைபெற்றது.

□ டாக்டர் சண்முகம், டாக்டர் தயாளன், டாக்டர் சுகுமார் ஆகியோர் 24 ஆகஸ்ட் மாலை 4-30 மணிக்கு நாராயணபுரம் அருகிலுள்ள கண்ணனேந்தல் கிராமத்திற்குச் சென்று சுமார் 200 நோயாளிகளுக்கு மருத்துவ உதவிகளை இலவசமாக வழங்கினர்.

□ சிவகாசி, ஸ்ரீசுவாமிஜி சன்மார்க்கப் பேரவையின் சார்பாக சிவன் கோவிலில் ஆகஸ்ட் 26, 27 தேதிகளில் இரவு 7 மணிக்கு நடைபெற்றக் கூட்டங்களில் சுவாமி ராகவேசானந்தரும் சுவாமி கமலாத்மானந்தரும் ஸ்ரீமத் பகவத்கீதை குறித்து உரையாற்றினர். ஆகஸ்ட் 26 முதல் செப்டம்பர் 1 முடிய கீதையின் முதல் 6 அத்தியாயங்களுக்கு சுவாமி ராகவேசானந்தர் விரிவுரை வழங்கினார்.

□ டாக்டர் சண்முகம், டாக்டர் தயாளன் ஆகியோர் ஆகஸ்ட் 28 மாலை 4 30 மணிக்கு நாராயணபுரம் அருகிலுள்ள கோசாகுளம் கிராமத்திற்குச் சென்று 150 நோயாளிகளுக்கு மருத்துவ உதவிகளை இலவசமாக வழங்கினர்.

நாராயணபுரம் அருகிலுள்ள பேங்க் காலனியில் 28—9—81 இரவு 7 மணிக்கு நடைபெற்ற குத்துவிளக்கு பூஜையில் கலந்துகொண்டு சுவாமி கமலாத்மானந்தர் 'ஆன்மிக வாழ்க்கை' குறித்துச் சொற்பொழிவாற்றினார்.

ஆகஸ்ட் 29 மாலை 4-30 மணிக்கு நாராயணபுரம் அருகிலுள்ள திருப்பாலை கிராமத்திற்குச் சென்று டாக்டர் தயாளன் 110 நோயாளிகளுக்கு மருத்துவ உதவிகளை இலவசமாக வழங்கினார்.

□ 29—8—81-ஆம் நாள் இரவு 7 மணிக்கு மதுரை, அண்ணா நகரில் நடைபெற்ற இந்து சமய மன்றத்தின் கூட்டத்தில் சுவாமி கமலாத்மானந்தர் கலந்துகொண்டார்.

□ 30—8—81-ஆம் நாள் காலை 10 மணிக்கு மதுரை, சோலை மஹால் கல்யாண மண்டபத்தில் நடைபெற்ற குருபூஜை விழாவில் கலநதுகொண்டு சுவாமி கமலாத்மானந்தர் 'இந்தியப் பண்பாடு' குறித்து சிறப்புரை நிகழ்த்தினார்.

30—8—81 இரவு 7 மணிக்கு மதுரை, விஸ்வஹிந்து பரிஷத் சார்பாக பாங்கூர் தர்மசாலாவில் நடைபெற்ற கூட்டத்தில் சுவாமி கமலாத்மானந்தர் உரையாற்றினார்.

31—8 81-ஆம் நாள் பகல் 2 மணிக்கு சமீபத்தில் மதமாற்றம் நடைபெற்ற மீனாட்சிபுரம் கிராமத்திற்கு சுவாமி கமலாத்மானந்தர்

சென்றிருந்தார். மீனாட்சிபுரத்திலிருந்து இரண்டு பர்லாங் தூரத்திலுள்ள பண்பொழி யில் நடைபெற்ற இரண்டு கூட்டங்களிலும் முறையே 'நமது பண்பாட்டைப் பாதுகாத் தல்', 'ஹிந்துமதமும் நமது கடமையும்' குறித்து கமலாத்மானந்தர் உரையாற்றினார். கூட்டத் திற்கு வந்திருந்த 350 பேர்களில் சுமார் 200 பேர் மீனாட்சிபுரத்தைச் சேர்ந்தவர்களாவர்.

☐ *1—9—81* ராஜபாளையத்தில் காந்தி கலை மன்றத்தில் இரவு 7 மணி முதல் 8-45 மணி வரை 'ஹிந்து மதத்திற்கு நமது பங்கு' குறித்து சுவாமி கமலாத்மானந்தர் உரை நிகழ்த்தினார்.

☐ சமீபத்தில் ராமநாதபுரம் மாவட்டத் தைச் சேர்ந்த கூரியூர் கிராமத்தில் 192 அரிச னங்கள் இஸ்லாம் மதத்தைத் தழுவினர் என் பது வாசகர் அறிந்ததே. ஹிந்து ஒற்றுமை மையத்தின் சார்பாக 2—9—81 ஆம் நாள் மாலை 4 மணிக்கு கூரியூரில் நடைபெற்ற விநா யகர் சதுர்த்தி விழாவில் சுவாமி கமலாத்மா னந்தர் கலந்துகொண்டு 'தீண்டாமை ஒழிப் பும் மத மாற்றங்களைத் தடுத்தலும்' குறித்து சொற்பொழிவு நிகழ்த்தினார்.

☐ ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த கவரங்குளம் கிராமத்தில் ஹிந்து ஒற்றுமை மையத்தின் சார்பாக 4 9 81 மாலை 5 மணிக்கு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் 'இந்துமதமும் மத மாற்றங்களும்' குறித்து சுவாமி கமலாத்மானந்தர் உரையாற்றினார்.

☐ ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த சத்திரங்குடி கிராமத்தில் ஹிந்து ஒற் றுமை மையத்தின் சார்பாக 4—9—81 மாலை 6 மணிக்கு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் 'தீண்டாமை ஒழிப்பும் மதமாற்றங்களைத் தடுத்தலும்' குறித்து சுவாமி கமலாத்மானந் தர் சிறப்புரையாற்றினார். சத்திரங்குடியின் ஒரு பகுதியான சேதுபதி விவேகானந்தபுரத் தில் 70 அரிஜனக் குடும்பங்களுக்கு 70 வீடுகளை ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் முன்பு கட்டிக் கொடுத்ததை சத்திரங்குடி அரிஜனத் தலைவர் கள் பொதுக்கூட்டத்தில் குறிப்பிட்டுப் பேசி னர்.

☐ பரமக்குடியில் 5—9—81 மாலை 5-30 மணிக்கு பெருமாள்கோவில் எதிரில் நடை பெற்ற பொதுக்கூட்டத்தில் 'மதமாற்றங் களும் ஹிந்துக்களின் கடமையும்' குறித்து சுவாமி கமலாத்மானந்தர் உரையாற்றினார்.

☐ மதுரை, ஸ்ரீராமகிருஷ்ண பிரார்த்த னலயாவில் 6-9—81 ஆம் நாள் சுவாமி கமலாத்மானந்தரால் அந்தாயோகம் நடத்தப் பெற்றது.

☐ மதுரை, கிருஷ்ணாபுரத்தில் 6—9—81 மாலை 5 மணிக்கு ஹிந்து ஆலயப் பாதுகாப்புக் குழுவின் சார்பில் கூட்டு வழிபாடு, அரிசனங் களுக்குத் துணி வழங்குதல், சமபந்தி போஜ னம் ஆகிய நிகழ்ச்சி நடைபெற்றன. நிகழ்ச்சி களில் கலந்துகொண்ட சுவாமி கமலாத்மானந் தர் 'ஹிந்து மறுமலர்ச்சி' குறித்து சிறப்புரை யாற்றினார்.

6—9—81 காலை 10 மணிக்கு அரக்கோ ணத்தில் ஸ்ரீராமகிருஷ்ண விவேகானந்த மன் றத்தின் சார்பாக சுவாமி விபுதானந்தரின் ஆன்மிகச் சொற்பொழிவு நடைபெற்றது.

☐ 11 9 81 மாலை 5-30 மணிக்கு நாட் டறம்பள்ளி ஸ்ரீராமகிருஷ்ண மடம் 'கிராமீய நடமாடும் மருந்தகம் (Rural Mobile Dispen-sary)' மூலம் சுற்றுப்புற கிராம மக்களுக்கு மருத்துவப் பணியைத் துவக்கியுள்ளது.

ராமநாம மகாமந்திரத்தைச் சிவன் ஜபிக்கிறார். காசியில் இறப்போர் மோட்சம் பெற இந்த மந்திரம் உதவுகிறது. இதன் பெருமையை விநாயகர் அறிவார். இதனால் அவருக்கு முதல் பூஜை நடக்கிறது.

—துளசி ராமாயணம்

ஸ்ரீராமகிருஷ்ண மடம்

சென்னை-600004

1981 அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாத நிகழ்ச்சிகள்

ஸ்ரீ ஸ்ரீ துர்க்கா பூஜை

4-10-81 ஞாயிறு : ஸ்ரீ துர்க்கா சஷ்டி

5-10-81 திங்கள் : மகா சப்தமி (மாலை 5-30 மணிக்கு ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாம அர்ச்சனை)

6-10-81 செவ்வாய் : மகா அஷ்டமி (இரவு 1-44 முதல் 2-32 A.M. வரை சந்தி பூஜை)

7-10-81 புதன் : மகா நவமி

8-10-81 வியாழன் : விஜய தசமி (மாலை வழிபாட்டிற்குப் பிறகு சாந்திஜலம் தெளித்தல்)

விசேஷ தினங்கள்

18-10-81 செவ்வாய் : ஸ்ரீ லக்ஷ்மி பூஜை (மாலை வழிபாட்டிற்குப் பிறகு)

27-10-81 செவ்வாய் : தீபாவளி—ஸ்ரீகாளி பூஜை (மாலை வழிபாட்டிற்குப் பிறகு)

அந்தர் யோகம்—11 அக்டோபர், 8 நவம்பர், 6 டிசம்பர்)

9, 23 அக்டோபர் & 8, 22 நவம்பர் & 7 டிசம்பர் ஆகிய ஏகாதசி தினங்களில் மாலை வழிபாட்டிற்குப் பிறகு ஸ்ரீராமநாம சங்கீர்த்தனம் நடைபெறும். டிசம்பர் 21 ஏகாதசி தினத்தில் மட்டும் மாலை வழிபாட்டிற்கு முன்பு ஸ்ரீ ராமநாம சங்கீர்த்தனம் நடைபெறும்.

தூய அன்னை ஸ்ரீசாரதாதேவியார் ஜயந்தி விழா

17-12-81 வியாழன் : ஜன்ம திதி: விசேஷ பூஜை, பஜனை, ஹோமம் முதலியன காலை 5 மணி முதல் 11 மணி வரை நடைபெறும். மாலை வழிபாட்டிற்குப் பிறகு 'ஸ்ரீஅன்னையின் வாழ்வும் வாக்கும்' பற்றிய சொற்பொழிவுகள்.

20-12-81 ஞாயிறு : ஸ்ரீசாரதாதேவியார் ஜயந்தி விழா பொதுக்கூட்டம் (மாலை 5-30 மணி)

மற்ற ஜயந்திகள்

9-11-81 திங்கள் : சுவாமி சுபோதானந்த ஜயந்தி

11-11-81 புதன் : சுவாமி விஞ்ஞானந்த ஜயந்தி

6-12-81 ஞாயிறு : சுவாமி பிரேமானந்த ஜயந்தி

21-12-81 திங்கள் : சுவாமி சிவானந்த ஜயந்தி

சத்சங்கம் : ஞாயிறு தோறும் மாலை 4 மணி முதல் 5-30 மணி வரை

ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாம பாராயணம் (11, 25 அக்டோபர் & 8, 22 நவம்பர் & 6, 27 டிசம்பர்)

ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணம் (18 அக்டோபர் & 1, 15, 29 நவம்பர் & 13 டிசம்பர்)

1. ஸ்ரீமத் பாகவதம்—திரு 'அண்ணா' (11 அக்டோபர் & 1 நவம்பர் & 6 டிசம்பர்)
2. ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமம்—திரு வி. ஆர். கல்யாணசுந்தர சாஸ்திரிகள் (25 அக்டோபர் & 8 நவம்பர் & 13 டிசம்பர்)
3. ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம்—திரு வி. எஸ் வி. குருஸ்வாமி சாஸ்திரிகள் (8 அக்டோபர் & 15 நவம்பர் & 27 டிசம்பர்)
4. ஸ்ரீ ஆஞ்சனேயர்—திரு ஆர். கோதண்டராமன் (22 நவம்பர்)

மாலை 5-35 முதல் 6-30 மணி வரை சுவாமி கபீரானந்தர் 'பக்தி ரத்னாவளி' என்ற தலைப்பில் அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களிலுள்ள (டிசம்பர் 20 தவிர) ஞாயிற்றுக் கிழமைகளில் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

வார நாட்களில் நடைபெறும் சொற்பொழிவுகள் (மாலை 6-45 மணிக்கு)

1. திங்கள் ஸ்ரீராமகிருஷ்ணரின் உபதேசங்கள்—சுவாமி அமிர்தானந்தர்
2. செவ்வாய் கர்மயோகம்—சுவாமி கபீரானந்தர்
3. புதன் ஆத்மபோதம்—சுவாமி பிரசாந்தானந்தர்
4. வியாழன் ஆன்மிக வாழ்க்கை—சுவாமி கமலாத்மானந்தர்
5. வெள்ளி மனுஸ்மிருதி—'அண்ணா' சுப்ரமண்யம்
6. சனி (3 அக்டோபர், 7 நவம்பர், 5 டிசம்பர் மட்டும்) அத்யாத்ம ராமாயணம்—ஜஸ்டிஸ் பி. ராமகிருஷ்ணன், ஐ.சி எஸ். (ரிடையர்டு)
7. சனி (10 அக்டோபர், 14 நவம்பர், 12 டிசம்பர் மட்டும்) ஸ்ரீ ஆஞ்சனேயர்—ஆர். கோதண்டராமன்

வேறு சில நிகழ்ச்சிகள்

மாதந்தோறும் முதல் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10 மணிக்கு சுவாமி விபுதானந்தர் உரை நிகழ்த்துவார். இடம்: ஸ்ரீராமகிருஷ்ண-விவேகானந்த மன்றம், அரக்கோணம்.

மாதந்தோறும் இரண்டாவது சனிக்கிழமைகளில் மாலை 5 30 மணிக்கு சுவாமி விபுதானதர் உரை நிகழ்த்துவார். இடம்: 7, கெல்லீஸ்ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை.

மாதந்தோறும் கடைசி ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை 5-30 மணிக்கு சுவாமி விபுதானந்தர் உரை நிகழ்த்துவார்; இடம்: 34/1, எண்ணூர் நெடுஞ்சாலை, சென்னை-19.

மாதந்தோறும் மூன்றுவது ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9-30 மணிக்கு 'ஸ்ரீராமகிருஷ்ணரின் உபதேசங்கள்' என்ற தலைப்பில் திரு வி. ராமமூர்த்தி உரை நிகழ்த்துவார்.

இடம்: H/28/F காமராஜர் நகர், திருவான்மியூர், சென்னை-41.

மாதந்தோறும் கடைசி ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9-30 மணிக்கு பெரம்பூர் அன்னதான சமாஜத்தைச் சேர்ந்த சுவாமி விவேகானந்தர் நூற்றுண்டு நினைவுமண்டபத்தில் 'ஸ்ரீராமகிருஷ்ணரின் உபதேங்கள்' என்ற தலைப்பில் திரு வி. ராமமூர்த்தி உரை நிகழ்த்துவார்.

எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும் மாலை 4-15 மணிக்கு சுவாமி ராகவேசானந்தர் அவர்கள் சௌந்தர்ய லஹரி பாராயணமும் 'பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர்' என்ற தலைப்பில் சொற்பொழிவும் நிகழ்த்துவார். இடம்: 18, 9வது லேன், சாஸ்திரி நகர், சென்னை.

அனைவரையும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

தொலைபேசி
71231

தலைவர்
ஸ்ரீராமகிருஷ்ண மடம்
சென்னை-600 004